# புதிய தேடல்

# PUTHIA THEDAL

2026

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

தமிழ் மாத இதழ்
Tamil Monthly Magazine



# சுதந்திர வானில் புதுப்படைப்பாய்


Volume 17 | Issue 7 | July 2026 | Pages 36 | Price Rs.20/- | Annual Subscription - 200/-

மலர் 17 | இதழ் 7 | ஜுலை 2026 | பக்கம் 36 | விலை ரூ.20/- | ஆண்டு சந்தா - 200/-



# ANNAI EVENT
## & Decoration

83001 65160

North Street Marthandam

| | |
|---|---|
| CATERING SERVICE | TENT WORKS |
| VEG & NON VEG FOOD | DANCERS |
| POPCORN \| SWEETS | SOUNDS \| DJ |
| TABLE SETUP | ENTERTAINMENT |
| DECORATION | MAKEUP |
| PHOTOGRAPHY | LED WALL |
| HOME DECORATION | WELCOME GIRLS |













## புதிய தேடல்

இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு



*ஆசிரியர்*

அருள்முனைவர் **இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச்செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள்முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**



*தொடர்பு முகவரி:*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் - 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்**: newputhiathedal@gmail.com



**தனிஇதழ் : ₹ 20**

**ஆண்டுச் சந்தா : ₹ 200**

**ஆயுள் சந்தா : ₹ 2000**



விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பலவண்ண அட்டை வெளிப்பக்கம் | : ₹ 12000 |
| பலவண்ண அட்டை உள்பக்கம் | : ₹ 7000 |
| முழுப்பக்கம் கறுப்பு | : ₹ 2000 |
| அரைப்பக்கம் கறுப்பு | : ₹ 1000 |




# ஆசிரியரின் அன்பு வரிகள்

அருள்முனைவர்

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**

**புதுப்பிறப்படைய, புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

**"வலிகளை தகர்த்து**
**விலங்குகள் உடைத்து**
**புதிய சிறகுகள் வலிமை கூட்டி**
**விடுதலை காட்டும் உண்மை"**

புழு பட்டாம்பூச்சியாகிறது தன் சிறகால் பறந்து உலகை அளக்கிறது, அழகிய சிறகால் நம் யாவரையும் ஈர்க்கிறது. மனிதன் அகம் மலர்ந்து கரம் நீட்டியதால் வந்தமர்ந்தது பட்டாம்பூச்சி, அதன் வண்ணம் மலர்ந்தது. மகரந்தம் தரும் மலரைவிட மென்மையானது மனிதனின் கனிந்த மனம் என்பது உறுதியாகிறது. கனிந்த மனதில் மனிதம் வளரும் உன்னதமான புதுவாழ்வு பிறக்கும்.

சில பல நூற்றாண்டுகளாக அன்னியர்கள் நம்மை அடிமைப்படுத்தி மனித மாண்பின் சிறகை நம்மில் முளைக்காமல் செய்தார்கள். நம் முன்னோர்களின் அர்ப்பணமிகு தியாகத்தால், நேர்த்தியான முயற்சியால், கூட்டுப்புழு நிலை உருவாக்கப்பட்டு நம் தேசம் வண்ணத்துப்பூச்சியைப் போல சுதந்திர வானைப் பெரும் மகிழ்ச்சியோடு கண்டது.

ஆனால் சிறகடித்துப் பறக்க வேண்டிய நம்முடைய சுதந்திர வாழ்வு சாதிய கட்டமைப்பால், மனித மாண்பு மூழ்கடிக்கப்பட்டு, புழுக்களைப் போல நெகிழ்ந்து கொண்டிருப்பது காலத்தின் அவலம். சமய வெறியால் சுதந்திரச் சிறகு சிதறடிக்கப்படுவது காலத்தின் இழிவு. எளியோர், வறியோர் ஏற்றத்தாழ்வால் சுதந்திரக் கனவு சிதைக்கப்படுவது நிகழ்காலத்தின் கவலை.

அன்னை மரியாவின் விண்ணேற்பும், நமது தேசத்தின் விடுதலையும் நம்மை புதுப்படைப்பாக்கட்டும். நாம் சுயமாய் ஆய்ந்து, சுகமாய் வாழ்வோம். வன்மம் அகற்றி அமைதி வளர்ப்போம். ஏக்கம் தவிர்த்து ஏற்றம் காண்போம், வறுமை மாற்றி வளமை காப்போம். பிளவுகள் களைந்து பிரிவினை தவிர்ப்போம். மதங்கள் கடந்து மனிதம் படைப்போம். இதயம் மலர்ந்து பிறரன்பில் மகிழ்வோம். வாரீர் சுதந்திர வானில் எழுந்து ஒளி வீசுவோம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல்**
**வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

"தனக்கெனத் தேவைகள் என்று எதையும் கருதாமல் வாழ்க்கையின் அவசியங்கள் என்று ஏதனுடனும் தன்னை விலங்கிலிட்டு கொள்ளாமல் வாழ்பவனுக்குத்தான் சுதந்திரம் என்றால் என்ன என்று புரியும்"

நம்மில் பலர் பழைய காலங்களின் காயங்களையும் வடுக்களையும் சுமந்து கொண்டு இனிமேல் என்னால் மாற முடியாதென துவண்டுபோய் வாழ்க்கை முடிந்துவிட்டதென நினைப்பதுண்டு. ஆனால் இறைவன் நினைப்பது அப்படியல்ல, இதோ உன்னை புதிய ஒரு படைப்பாய் மாற்றுகிறேன். உனக்கான வாழ்வை நான் அளிக்கிறேன் என்ற இயேசுவின் நம்பிக்கைச் செய்தியே நமது புதுப் பிறப்பின் துவக்க புள்ளி.

நான் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலை பெற்றவர்களாக இருப்பீர்கள் (யோ. 8: 36) என்கிறார் இறைமகன் இயேசு. அதேபோலத் தான் இறைமகன் இயேசுவை தனது மீட்பராய் ஏற்றுக்கொள்ளும் மனிதரும் புதுப்படைப்பாகிறார்கள். இதனால் அவர்களுக்குள் இருந்த பழைய உணர்வுகள் எல்லாம் விடை பெறுகின்றன. புதுப் பிறப்பாய் நம்மை உருமாற்றுகின்றன.

மாற்றம் என்பது ஒவ்வொரு மனிதனின் இதயத்தின் உள்ளிருந்து ஆரம்பமாக வேண்டும். எப்படி ஒரு விதை மண்ணுக்குள் அமைதியாய் கிடந்து ஆழமாய் வேர்களை விட்டு பின்னர் முளையாய் மண்ணின் மேற்பரப்பில் துளித்து, மரமாக வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிகளை கொடுக்கின்றதோ அப்படிப்பட்ட மாற்றம் ஒவ்வொருவருக்கும் எழ வேண்டும். உண்மையான மாற்றம் என்பது உள்ளிருந்து துவங்கி வெளியே ஊடுருவி ஏற்றம் தர வேண்டும்.

தாழ் நிலையில் இருக்கும் தன்னை எல்லா தலைமுறையினரும் பேறு பெற்றவர் என்று சொல்லும் அளவிற்கு இறைவன் தன்னை உயர்த்தியுள்ளார் என்ற புரட்சி பாடல் அன்னை மரியாவில் ஒலிக்கின்றது. இப்பாடல் விடுதலை உணர்வையும் அக, புற சுதந்திரத்திற்கான உள்ளொளியையும் பிறப்பெடுக்க செய்கிறது.

ஒரு சவுல், பவுலாய் மாறி உலகையே புரட்டிப்போட முடியுமெனில் நாமும் இன்றைக்கு இறை இயேசுவின் விழுமியங்களால் மாற்றங்களின் நாயகர்களாக வாழ முடியும். நம் முன்னோர்களின் தியாகமும் அன்னை மரியாவின் அர்ப்பணமும் நம் சுதந்திர வாழ்விற்கான வழிகாட்டும் வழிதடங்கள். சுதந்திர வானில் சிறகுகள் விரிக்க புது படைப்பாவோம். புத்துலகம் படைப்போம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்.

இதழ் 07 மலர் 17 ஜூலை 2026


| எண் | படைப்பு |
|---|---|
| 1. | ஆசிரியரின் அன்பு வரிகள் |
| 2. | ஆயரின் அமுத மொழிகள் |
| 3. | ஆன்மிகத்தால் மறுமலர்ச்சியை உருவாக்கிய புனிதர் |
| 4. | விண்ணேற்பு அன்னையும் விடுதலை உணர்வும் |
| 5. | வன்முறையை வழிமுறையாகக் கொண்டோர் வரலாற்றில் பெரும் புள்ளிகளல்ல, கரும்புள்ளிகள் |
| 6. | சுதந்திர தினமும் சிறுபான்மையினரின் கவலைகளும் |
| 7. | புனித சுவக்கின், அன்னா திருவிழாவும் தாத்தா, பாட்டியர் நாளும் |
| 8. | வேற்றுமையின் பூங்காவில் நல்லிணக்க ஒளி |
| 9. | நம்பிக்கையில் நம்மை ஆழப்படுத்தும் புனித தோமாவும், புனித யாக்கோபும் |
| 10. | நட்பே பிரதானம் |
| 11. | ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கும் இளைஞர்கள் |
| 12. | பெற்றோரின் பொறுப்புணர்வு |
| 13. | இயற்கையின் பாதையில் நுரையீரல் ஆரோக்கியம் |
| 14. | மார்த்தா, மரியா, இலாசர் |
| 15. | பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள் |
| 16. | ஆயரின் அலுவல்கள் |



# ஆன்மீகத்தால் மறுமலர்ச்சியை உருவாக்கிய புனிதர்

**Rev. Dr. ச. சேவியர் பெனடிக்ட், DCL.**
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர், குழித்துறை மறைமாவட்டம்).

பங்குகளில் பணி செய்யும் அருள்பணியாளர்களின் பாதுகாவலராகக் கொண்டாடப்படுகின்ற புனித ஜாண் மரிய வியான்னியின் திருவிழாவை ஆகஸ்ட் 4 ஆம் நாள் அகில உலகத் திருஅவை கொண்டாடுகின்றது. புதுமைகளையோ,



சாதனைகளையோ நிகழ்த்திய மனிதராக இல்லையென்றாலும் அவர் புனிதராகக் கொண்டாடப்படுவதற்குக் காரணம் அவர் கிறிஸ்தவ மத குருவாக அல்ல, ஆன்மீகக் குருவாக வாழ்ந்தார் என்பதே. இந்த உலகம் மதவாதிகளைப் பின்தள்ளுகின்றது, ஆன்மீக வாதிகளைப் பின்பற்றுகின்றது. ஏனென்றால் மதவாதிகள் கடவுளைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்துகின்றார்கள். ஆன்மீகவாதிகள் தன்னிலே கடவுளை பிரதிபலிக்கின்றார்கள். ஆன்மீக ஆளுமையைத் தன்னிலே உருவாக்கிய புனித வியான்னி தன் வழியாக மக்கள் கடவுளின் அன்பை உணரச் செய்தார்.

**இளமைப் பருவம்**

புனித ஜாண் மரிய வியான்னியின் இளமைக் காலம், பிரஞ்சுப் புரட்சியின் காலம். புரட்சியின்போது பிரான்ஸ் அரசு, ஆலயங்களையும், கன்னியர் மடங்களையும் மூடியது. திருஅவைச் சொத்துக்களை அரசுடைமையாக்கியது. அருள்பணியாளர் களைச், சிறையிலடைத்து, பலரை நாடு கடத்தியது, சிலரைக் கொலை செய்தது. பகுத்தறிவை மதமாக அரசு திணித்தது. இந்த அச்சம் சூழ்ந்த நிலையிலும், உள்ளத்தில் உறுதியான நம்பிக்கையோடு, தான் ஒரு அருள்பணியாளராக இறைபணியாற்ற வேண்டும் என்று தளராது முயற்சித்தார் புனித வியான்னி. புரட்சிக் காலத்தில் முறையான கல்வி கிடைக்காததால், மொழிப் புலமை அவருக்கு இல்லை. குருத்துவத்திற்காகப் படிக்கும்போதே கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டதால் குருத்துவப் பயிற்சியை இடையில் நிறுத்த வேண்டியிருந்தது. திரும்பி வந்தபின் தனி ஆசிரியரை அமர்த்திக் கற்றுக் கொடுத்தபோதும் அவரால் வெற்றிபெற முடியவில்லை. ஆயினும் அவருடைய நற்குணங்களையும், ஆன்மீகத்தையும் கண்டு அதிசயித்த ஆயர் அவரைக் குருவாக திருநிலைப்படுத்தினார்.

**மதம் ஒரு முகமூடி, ஆன்மீகமே மாற்றத்தின் சக்தி**

இன்று நம் மக்கள் மதத்தைப்

பின்பற்றுகின்றார்களா, அல்லது ஆன்மீகத்தைப் பின்பற்றுகின்றார்களா என்ற கேள்வியை எழுப்பினால், மதத்தைத்தான் பின்பற்றுகின்றார்கள் என்று உறுதியாகக்கூறலாம்.

சிறந்த பக்திமான்கள், ஆழ்ந்த நம்பிக்கையாளர்கள் என்று அறியப்படுகின்ற பலரும் ஆலயத்திற்கு வெளியே வந்தால் இயேசுவை மறந்து விடுகின்றார்கள். அன்பு செய்ய கற்றுக்கொடுத்த மதத்தை, பிறரை வெறுக்க ஆயுதமாகப் பயன்படுத்துகின்றார்கள்; தங்கள் தவறுகளை நியாயப்படுத்த இறைவார்த்தையைப் பயன்படுத்துகின்றார்கள்; பிறரைத் தீர்ப்பிடுகின்றார்கள்; பழிவாங்கத் துடிக்கின்றார்கள்; ஏமாற்ற முயற்சிக்கின்றார்கள். இவர்களுக்கு மதம் என்பது முகத்தில் பூசிக் கொள்ளும் அழகுசாதனமே தவிர, உள்ளார்ந்த ஆன்மீகம் அல்ல; ஒரு முகமூடியே தவிர உண்மையை உணர்ந்து வாழத் தூண்டும் ஆன்மீகச் சக்தி அல்ல.

## புனித மரிய வியான்னியின் ஆன்மீகம்

ஆர்ஸ் நகரின் அருள்பணியாளராகப் பணிபுரிந்தபோது கொடுமையான குற்றங்களைப் புரிந்தவர்களும் புனித வியான்னியின்முன்



பணிந்துபோகக் காரணம் அவரது தனிப்பட்ட ஆன்மீகம். உலக இன்பங்களை முற்றிலும் தவிர்த்து, சுயக்கட்டுப்பாட்டுடன் மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். குறைந்த நேரமே தூங்கினார். பல நாட்கள் படுக்கை இல்லாமல் தரையில் தூங்கினார். நோன்பு இருக்கும் நாட்களில் ஒரு உருளைக்கிழங்கு மட்டுமே உணவாக உட்கொண்டார். பல நாட்கள் சாக்கு உடையணிந்து தூங்கினார்.

தன் துன்பங்களைப் பிறர் பாவங்கள் மன்னிக்கப்பட ஒப்புக்கொடுத்தார். நற்கருணையின் முன் அமர்ந்து பல மணி நேரம் இறைவேண்டல் செய்வார். அன்னை மரியாவிடம் அளவு கடந்த பற்றும் பக்தியும் கொண்டிருந்தார். அனைத்திற்கும் மேலாக அடைக்கலம் தருபவர் மரியா என்று நம்பினார். திருச்சிலுவைமுன் அமர்ந்து தியானம் செய்தார். வாழ்வில் வரும் துன்பங்கள் தண்டனை அல்ல. அவற்றை ஏற்றுக் கொள்வதன் வழியாக இயேசுவிற்காகத் தியாகம் செய்கின்றோம்; துன்பங்கள் விண்ணகத்திற்கு ஏறிச் செல்லும் ஏணிப்படி என்று கூறினார். புனிதரின் இந்தக் குணாதிசயங்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. அவரைப் பார்ப்பதற்கென்றே ஆர்ஸ் நகரத்திற்கு வருடத்திற்குச் சுமார் 20000 பேர் வந்து சென்றனர்.

## ஏழைகள் மேல் இரக்கம் கொண்ட புனிதர்

புனித வியான்னி ஏழைகள்மீது அதிக இரக்கம் கொண்டவராக இருந்தார். தனக்குரிய உடைகள், பொருட்களை விற்று ஏழைகளுக்குக் கொடுத்தார். தன் காலணிகளைக்கூட ஏழைகளுக்குக் கொடுத்திருக்கின்றார். தான் எளிய உணவு உண்டுவிட்டு ஏழைகளுக்கு நல்ல உணவை பகிர்ந்தளித்தார். ஏழைகள் எப்போது உதவிகள் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் உதவி செய்யும் வள்ளல் குணம் உடையவராகத் திகழ்ந்தார். கைவிடப்பட்டவர்களுக்காக ஒரு இல்லத்தை ஆரம்பித்து அங்கு வந்த சிறுவர் சிறுமியர் இலவசமாகக் கல்வி பெற ஏற்பாடு செய்தார்.

## ஆன்மீக ஏழைகள்மீது பரிவு கொண்ட புனிதர்

வாழ்வதற்கு முக்கியமான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய இயலாத ஏழைகள்மீது இரக்கம் கொண்டதுபோல,

பாவத்தின் தாக்கத்தால் கடவுளின் அருளைப் பெற முடியாமல் தவித்த ஆன்மீக ஏழைகள்மீதும் புனித வியான்னி இரக்கம் கொண்டார். ஒவ்வொரு நாளும் 16 மணி நேரம் முதல் 18 மணி நேரம் வரை ஒப்புரவு அருளடையாளம் வழங்கினார். புனித வியான்னியிடம் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் புனித வாழ்வு வாழத் தூண்டப்பட்டார்கள். புனிதரின் அறிவுரையாலும், போதனையாலும், எடுத்துக்காட்டான வாழ்வினாலும் தனிமனித மாற்றம் பெற்றவர்கள் சமூக மாற்றத்தின் கருவிகளாகவும் மாறினர்.

## தனிமனித மாற்றத்திலிருந்து சமூக மாற்றத்திற்கு

புனித வியான்னியின் இரக்கச் செயல்களும், பரிவு மிகுந்த வார்த்தைகளும் ஆர்ஸ் நகரின் கலாச்சாரத்தையே மாற்றியது என்பது உண்மை. மது அருந்துதல், இரவு கேளிக்கை விடுதிகளில் நடனமாடுதல், ஒழுக்கமற்ற வாழ்க்கைமுறை, வன்முறை, குடும்பத்தில் பிரிவு, பகைமையினால் தாக்குதல்கள் என்று கட்டுப்பாடின்றி வாழ்ந்த மக்கள் புனித வியான்னியின் வருகைக்குப்பின் ஆலயத்திற்கு வர ஆரம்பித்தார்கள். புனிதரின் மறையுரையைச் செவிமடுத்துக் கேட்டனர். தவறான வாழ்க்கையை விட்டு மனம் திருந்தியவர்களாக வாழத் தொடங்கினர். இந்த மாற்றம் ஆர்ஸ் நகரச் சமூகத்தின் கட்டமைப்பையே மாற்றியது. நகரின் கேளிக்கை விடுதிகள் மக்கள் வருகையில்லாமல் மூடப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையும் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டவர்களுக்கு விடுமுறை கொடுக்கப்பட்டது. அந்த நாள் திருப்பலிக்குச் செல்வதற்கும், இறைவேண்டல் செய்யவும் அமைதியாக ஓய்வெடுக்கவும், குடும்பத்தோடு நேரம் செலவிடவும் உதவியது. அமைதியைத் தேடிய மக்கள் ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் ஆர்ஸ் நகருக்கு வர ஆரம்பித்தார்கள். எனவே, புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. மக்கள் இறைவேண்டல் செய்ய வசதியாகப் பெரிய ஆலயம் கட்டப்பட்டது. குழப்பத்தில் சிக்கித் தவித்த ஒரு நகரம் அமைதியின் நகரமாகத் தலைநிமிர்ந்து நின்றது.

இன்றும் மதங்களால் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கிட முடியாது. உண்மையான ஆன்மீகம் தனிமனித வாழ்வை மாற்றும்; சமூகத்தின் பாதையை மாற்றும்; மக்கள் அமைதியில் வாழ இறையாட்சிக் கனவை நனவாக்கும். புனித வியான்னியின் வாழ்வே அதற்கு சாட்சி.

## வாழ்க்கை ஒரு பயணம்

நல்லதோ கெட்டதோ
நகர்ந்து கொண்டே இருங்கள்
இன்பம் வந்தால்
ரசித்துக் கொண்டே செல்லுங்கள்
துன்பம் வந்தால்
சகித்துக் கொண்டே செல்லுங்கள்
வாடினால் வருத்தம்
நிற்காமல் ஓடுவதே பொருத்தம்
ஓடுங்கள்
நதியாக வளைந்து நெளிந்து
இலக்கை அடையும் வரை

**ம. டேவிட் டிலன்,**
முளகுமூடு.



# விண்ணேற்பு அன்னையும் விடுதலை உணர்வும்

பேரருள்பணி. **ஒய்சிலின் சேவியர்**

அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா மண்ணக வாழ்வின் மகத்துவத்தையும் மாண்பையும் மதிப்பீடுகளையும் மனித நேயத்தையும் மதிப்பிட்டுக் காட்டுகிறது. மண்ணக வாழ்வின் பரிசுதான் விண்ணக வாழ்வு என்பதை அன்னையின் விண்ணேற்பு விழா வெளிப்படுத்துகிறது. மண்ணக வாழ்வின் நிறைவில் அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதைக் கொண்டாடும் விடுதலை விழாவே விண்ணேற்புப் பெருவிழா. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 விண்ணேற்பு விழா கத்தோலிக்க மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா சாதாரணமான விழா மட்டுமல்ல. மாறாக விடுதலையின் விழா, விழிப்புணர்வின் விழா. தனது மகனின் மீட்புத் திட்டத்தில், மீட்புப் பணியில் முழுமையாக இணைத்துக் கொண்டதால் கிடைத்த விண்ணகப் பரிசுதான் விண்ணேற்பு விழா. நமது நாடு சுதந்திரம் பெற்ற அதே நாளில் அன்னையின் விண்ணேற்பு விழாவைக் கொண்டாடுவது அனைத்துக் கொண்டாட்டங் களுக்கும் மணிமகுடமாக விளங்குகிறது. அன்னையின் விண்ணேற்பு விழா நமது நாடு சுதந்திரமடைந்த அதே நாள் ஏன் கொண்டாடப்படுகிறது என்றால், அன்னை மரியா கடவுளின் மீட்புத் திட்டத்தை உணர்ந்து, உடன் பயணித்து, அனுபவித்து, புரட்சிப் பாடலைப் பாடி, கடவுளின் விடுதலைப் பார்வையைப் பாருக்கு உணர்த்தியவர். புலம்பல் பாக்களைப் பாடிக்கொண்டிருந்த மக்களைப் புரட்சிப் பாதைக்கு அழைத்துச் சென்றவர் மரியா. முடங்கிக் கிடந்த மக்களை முன்னோக்கி முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றவர் மரியா. உரோமையர்களின் அடக்குமுறையும் அநீதியும் அழிந்துப் போக வேண்டுமென்று கனவு கண்டவர் மரியா. அங்குப் பெண்களுக்கு எதிராக நடந்த பாலியல் அத்துமீறல்களை அடியோடு அகற்ற வேண்டும் என்று நம்பிக்கையோடு கடவுளின் குரலுக்கு ‘ஆம்’ என்று பதில் கொடுத்து இறையாட்சிப் பணியில் பங்கெடுத்துப் பயணம் செய்தவர் மரியா. விடுதலைப் பணியில் அன்னை மரியாவின் பங்கு அளப்பெரியதும் அளவு கடந்ததும் என்று சொன்னால் அது மிகையாகாது. இளம் பெண் மரியா இறைவன் மீது கொண்டிருந்த ஆழமான, அழுத்தமான, அசைக்க முடியாத நம்பிக்கைக்கும், நம்பிக்கையின் வெளிப்பாடாக அவர் ஆற்றிய பணிகளுக்கும் கிடைத்த அளப்பரிய பரிசே அன்னையின் விண்ணேற்பும், விடுதலையும் ஆகும். பெண்கள் துணிச்சல் நிறைந்தவர்கள், அவர்களால் அனைத்தையும் சாதிக்க முடியும் என்பதை முடங்கிக் கிடந்தப் பெண்களுக்கு எடுத்துச்சொல்லி எடுத்துக்காட்டாய் நிற்பவர்தான் அன்னை மரியா. அன்னை மரியாவுக்கு விழா எடுத்துக் கொண்டாடி வணக்கம் செலுத்து வதோடு நின்று விடுகிறோமென்றால் நாமெல்லோரும் போலிக் கிறித்தவர்களே! விண்ணேற்பு அன்னையின் விழாவை ஆடம்பரமாகக் கொண்டாடி ஆயிரங்களைச் செலவு செய்வதோடு நம்பிக்கை வாழ்வை நலிவடையச் செய்தால் நாமெல்லோரும் வேரற்ற கிறித்தவர்களே! மண்ணக வாழ்வின் அர்த்தமுள்ள வாழ்விற்கு கிடைத்த மாபெரும் கொடையும், பரிசுமே விண்ணேற்பு என்பதை உணர்ந்து மண்ணகத்தில் மனிதநேயத்தோடும் மாண்போடும் மகத்துவத்தோடும் வாழ்வோம். விடுதலைப் பணியில் பங்கெடுப்போம். விண்ணக வீட்டை அடைவோம்.




# வன்முறையை வழிமுறையாகக் கொண்டோர் வரலாற்றில் பெரும் புள்ளிகளல்ல, கரும்புள்ளிகள்!

அருள்முனைவர் **ம. டேவிட் மைக்கேல்**

ஆசை மனிதருக்கு ஆறாவது விரலாக முளைத்திருக்கிறது. அடுத்தவர் உடைமையை அபகரித்தல் என்பது ஆயக்கலை அறுபத்து நான்கிற்குள் அடங்கியே இருக்கிறது. நாடு பிடிக்கும் நாட்டம் உலகத் தலைவர்களுக்கு இயல்பாகவே இன்றுவரைக்கும் இருந்து வருகிறது. அசிசியாரின் ஆண்டில் அமைதியின் தூதர்களாய்ப் புறப்பட அகிலம் ஆலாபனை செய்தாலும், குவலயத்தில் குண்டு முழக்கங்களுக்குக் குறைவேயில்லை. தீராக்கோபம் போரால் முடியும் என்பது வரலாற்றில் வழங்கி வரும் வழக்காகும். ஆனால் கோபம் தீர்ந்தாலும் போர்கள் மட்டுமே தீராத் தொடர்கதையாய் நீளுகின்றன.

1945 ஆகத்து 06 மற்றும் 09ம் தேதிகள் முறையே ஜப்பான் நாட்டின் நகரங்களான ஹிரோஷிமா மற்றும் நாகசாகி இரண்டும் அணுக்குண்டுக்கு இரையாகிச் சுமார்




இரண்டரை இலட்சம் மனித உயிர்கள் அழிக்கப்பட்ட கறுப்பு நிகழ்வாகும். இதை வரலாற்றில் வாடாத வடுவாக, ஈரம் காயாத இரத்தக் கறையாக 20ம் நூற்றாண்டு கறுப்புச் சரித்திரம் வரைந்து வைத்திருக்கிறது.

செருமனியின் வீழ்ச்சியோடு முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்திருந்தது. தங்கள்மீது நெருக்கடிகள் நிர்பந்திக்கப் பட்டதையும் நேச நாடுகள் தங்களை குறி வைப்பதையும் பொறுத்துக் கொள்ளாத செருமனி பழிவாங்கும் நாளுக்காகக் காத்திருந்தது. இதனிடையே சரித்திரக் கரும்புள்ளியாக கருதப்படுகிற அடால்ப் ஹிட்லர் தேசிய உணர்ச்சி என்னும் தொனியில் செருமானியார்களுக்கு இனவெறிக் கொம்பு சீவிக் கொண்டிருந்தார். இந்நிலையில் நாசக்கார நாசிகளின் செருமனி போலந்து மீது போர் தொடுத்தது. 1939ம் வருடம் செப்டம்பர் திங்கள் முதல் நாளில் செருமனி செய்த செயலால் உலகப் போர் இரண்டாவது முறையாக வெடித்தது. உலகம் நேச நாடுகள் மற்றும் அச்சு நாடுகள் என இரண்டு முக்கிய இராணுவக் கூட்டணிகளாக பிளந்து நின்று போரிட்டன. முப்பதுக்கும் மேற்பட்ட உலக நாடுகள் இந்த போரில் பங்கேற்றன. அமெரிக்கா, அன்றைய சோவியத் ஒன்றியம், ஐக்கிய அரசு, சீனா மற்றும் பிரிட்டிஷ் பேரரசு முழுவதும் உள்ள கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் பிரான்சு போன்ற நாடுகள் என ஒரு பக்கம் நேச நாடுகளின் கூட்டணியாகவும் நாசிச செருமனி, பாசிச இத்தாலி, ஜப்பானியப் பேரரசு இவைகளுடன் ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, சுலோவாக்கியா மற்றும் குரோஷியா ஆகிய நாடுகள் அச்சுக் கூட்டணி என்னும் தளத்தில் நேச நாடுகளின் கூட்டணியை எதிர்கொண்டன. ஆறு ஆண்டுகள் நடைபெற்ற போரில் இலட்சக்கணக்கில் மக்கள் மடிந்தார்கள்.

இந்நிலையில் அமெரிக்காவின்

ஹவாய் தீவில் அமைந்திருந்த பேர்ல் ஹார்பர் என அழைக்கப்படும் முத்துத் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத் தளம் மீது ஜப்பான் கொடூர விமானத் தாக்குதலை நடத்தியது. தற்போதைய அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமாகிய ஹவாய் தீவு அமெரிக்காவின் மத்தியப் பகுதியைத் தாண்டி தொலைவில் வடமேற்காகப் பசிபிக் கடலில் ஜப்பானுக்கு அருகில் அமைந்துள்ளது. இதை சாதகமாகப் பயன்படுத்தி ஜப்பான் தனது ஆளுகையை தென்கிழக்கு ஆசியாவில் விரிவுபடுத்த விரும்பியிருந்தது. தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானின் மேலாதிக்க நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் பசிபிக் கடற்படை தடையாக இருக்கும் என எண்ணி அமெரிக்கக் கடற்படையை முடக்கும் நோக்கில் ஜப்பான் முத்துத் துறைமுகத் தாக்குதலை முன்னெடுத்தது. 1941 டிசம்பர் 7ம் நாள் ஜப்பான் முத்துத் துறைமுகத்தை முற்றுகையிட்டுத் தாக்கியது. முன்னூற்று அறுபதுக்கும் மேற்பட்ட ஜப்பானிய போர் விமானங்கள் பேர்ல் ஹார்பரை துவசம் செய்தன. 3500க்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்களும் மக்களும் கொல்லப்பட்டனர். அமெரிக்காவின் விமானத் தளங்கள் மற்றும் போர்க் கப்பல்கள் சேதமடைந்தன. இத்தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்து இரண்டாம் உலகப் போரில் நேரடியாகக் களம் இறங்கியது.

நேச நாடுகள் முதலில் ஜப்பான் மீது தீக்குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தின. இதனால் பல நகரங்கள் அழிந்தன. பின்னர் தாக்குதல்களின் தீவிரம் அதிகரித்தது. இரண்டாம் உலகப் போரின் இறுதியாண்டில் நேச நாட்டுப் படைகளின் கூட்டணி ஜப்பானிய பெருநிலப் பரப்பின்மீது பெரும் அழிவை ஏற்படுத்தும் தீவிரப் போருக்கு தயாராகி வந்தன. இந்த முயற்சிக்கு முன்னோட்டமாக டோக்கியோ மீதான ஒரு தாக்குதல் உட்பட 64 ஜப்பானிய நகரங்களைச் சிதைக்கும் ஒரு வழக்கமான குண்டு வீச்சு மற்றும் தீக்குண்டு வீச்சுத் தாக்குதல் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஐரோப்பியப் போர் முனையில் நாசிச செருமனி 1945 மே 8ம் நாள் தோல்வியை ஒப்புக் கொண்டு சரணடைந்தது. ஆனால் பசிபிக் போர் முனையில் போர் நடந்தது. 1945 சூலை 26 அன்று நேச நாடுகள் வெளியிட்ட அறிக்கையில் ஜப்பான் தோல்வியை ஏற்றுக் கொண்டு நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாவிட்டால் உடனடியாக முழு அழிவைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்திருந்தது. ஆனால் ஜப்பான் இந்த எச்சரிக்கையைக் கண்டு கொள்ள வில்லை.

முத்துத் துறைமுகம் தாக்கப்பட்டதற்குப் பழி வாங்கும் தருணத்திற்காக நேச நாட்டுப் படைகளோடு இணைந்து அமெரிக்கா காத்திருந்தது. 1945ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6ம் நாள் ஜப்பானின் மக்கள் நெருக்கம் நிறைந்த ஹிரோஷிமா நகர்மீது காலை 8.15 மணிக்கு லிட்டில் பாய் (சின்னப் பையன்) எனப் பெயரிடப்பட்ட யுரேனியம் அணுகுண்டை அமெரிக்கா வீசியது. நகரின் பெரும் பகுதி நொடிப் பொழுதில் சாம்பலானதுடன் சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் துடிதுடித்து உயிரிழந்தனர். எனினும் ஜப்பான் சரணடைய மறுத்ததுடன் அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்தது. முதல் குண்டு வீசப்பட்ட மூன்று நாள்களுக்குப் பிறகு அதாவது 1945 ஆகத்து 9ம் நாள் ஜப்பானின் இன்னொரு நகரான நாகசாகி மீது புளூட்டோனியம் சார்ந்த ஃபேட் மேன் எனப்படும் பருத்த மனிதன் எனும் அணுகுண்டை அமெரிக்கா வீசியது. இத்தாக்குதலில் உடனடியாக எழுபத்து நான்காயிரம் பேரும் கதிர்வீச்சின் விளைவாக பல்லாயிரக்கணக்கான பேரும் உயிரிழந்தனர். அமெரிக்காவின் ராக்ஸ் கார் என்னும் ட29 ரக விமானம் மூலம் இந்தக் குண்டு வீசப்பட்டது. குண்டு வீச முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரம் ஜப்பானின் கொக்குரா ஆகும். ஆனால் அங்கு மேகமூட்டம் அதிகமாக இருந்ததால் அணுகுண்டுத் தாக்குதல் நாகசாகிக்கு திருப்பி

விடப்பட்டது. இந்தக் குண்டு வெடிப்பு வரலாற்றில் அணு ஆயுதம் பயன்படுத்தப்பட்ட இரண்டாவது மற்றும் கடைசி நிகழ்வாகும். இம்மாபெரும் பேரழிவைத் தொடர்ந்து 1945 ஆகத்து 15 அன்று ஜப்பான் நிபந்தனையற்ற சரணடைதலை அறிவித்ததுடன், அதே ஆண்டு செப்டம்பர் 2ம் நாள் சரணடைதல் பத்திரத்தில் ஜப்பான் கையெழுத்திட்டதுடன் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. பல இலட்சம் மக்கள் பலியாகியும் குண்டு வீச்சின் கதிர் இயக்கம் காரணமாகப் பல இலட்சம் மக்கள்



பாதிப்புகளைச் சந்தித்து வருவதும் வரலாற்று வேதனையாகும்.

நாடுகள் தங்கள் பலத்தை நிரூபித்துக் கொள்ள அப்பாவி மக்கள் பலியாக்கப்படுகிறார்கள் என்பதே நிதர்சன உண்மையாகும். இத்தாக்குதலில் உயிரிழந்த பலர் போர் வீரர்கள் அல்ல, அவர்கள் ஏதுமறியாத அப்பாவிப் பொதுமக்கள். ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் நிகழ்த்தப்பட்ட அணு குண்டு வெடிப்புகளும் அதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களும் பொருள் சேதங்களும் வரலாறு வலுவாகச் சொல்லும் மனுகுலத்திற்கான எச்சரிக்கை ஆகும். இவ்விரு குண்டு வெடிப்புகளின் வெப்பம் மற்றும் கதிர்வீச்சுக் காரணமாகப் பல இலட்சம் மக்கள் காயமடைந்து புற்றுநோய் மற்றும் கதிர்வீச்சு நோய்களால் பல ஆண்டுகள் அவதிப்பட்டனர். இன்றும் குண்டு வெடிப்புக்கு உள்ளான நிலப்பரப்புகள் அதன் காயங்களைத் தாங்கிக் கொண்டு தழும்புகளோடே சரித்திரத்தில் சாபக்கேடான நினைவுக் குறிப்புகளாகியுள்ளன. இறைவன் உருவாக்கிய எழில் சோலையான இந்த உலகையும் கடவுள் தன் சாயலாக உருவாக்கிய மனிதர்களையும் நொடிப் பொழுதில் அணு குண்டால் அழிக்க முயலும் மனித குல விரோதச் சக்திகளை மானுடத்தில் நம்பிக்கை கொண்டோர் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும். உலகில் நாடுகள் தங்களை வல்லரசாகக் காட்டிக் கொள்ள அணு ஆயுதங்களைக் குவிக்கின்றன. ஆயுத பலத்தால் வல்லரசாக மாறும் நிலையை அகற்றி மக்கள் வாழ்வை உயர்த்தும் நல்லரசாக இருக்க வேண்டும் என்பதே மனித நேயம் கொண்டவர்களின் எதிர்பார்ப்பு. அணுசக்தியை ஆக்கச் சக்தியாகப் பயன்படுத்தி மனிதர்களின் வாழ்வை வளமாக்க முயலுவதே நாடாளுவோருக்கு அரசியல் அறமாகும். வறுமை வாட்டியெடுத்து, பசித்த வயிறுகளோடு படுக்கைக்குப் போகும் ஏழைகள் வாழும் மூன்றாம் உலக நாடுகள்கூட குடிமக்களுக்கு உணவிடுதலை முதன்மையாகக், கொள்ளாமல் எதிரியை அழித்திட ஆயுதங்களில் பணத்தை விரயம் செய்யும் போக்கு கொடுமையானது. அழிவுச் சக்தியாக அணுசக்தியைப் பயன்படுத்தி உலக மக்களை அச்சுறுத்தும் ஈனச்செயலில் ஈடுபடும் தலைவர்கள் மக்கள் மன்றத்தால் நிராகரிக்கப்படுவார்கள் என்பதே நிதர்சன உண்மை. வரலாறு வன்முறையை விதைத்தவர்களை ஒருநாளும் ஒத்துக் கொள்ளாது. ஆயுதங்களை விற்று வன்முறைக்குத் துணைபோகும் நாடுகள் வல்லரசுகளல்ல, வரலாற்று வல்லூறுகள் என்பதே உண்மையாகும். வன்முறையை வழிமுறையாகக் கொண்டவர்கள் வரலாற்றில் பெரும்புள்ளிகளாக இருந்தாலும் அவர்கள் கரும் புள்ளிகளே. ஆயுதம் தமிழ் எழுத்தில் மட்டும் இருந்துவிட்டுப் போகட்டும். அது வாழ்வை அழித்திட அனுமதியோம் என உறுதியேற்போம். அணுகுண்டால் அகிலம் அழிவதைத் தடுக்க எல்லோரும் ஒரே புள்ளியில் நின்று குரல் கொடுப்போம்.



# சுதந்திர தினமும் சிறுபான்மையினரின் கவலைகளும்

பேரருள்பணி. M. C. ராஜன்

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகும். பல்வேறு மொழிகள், மதங்கள், இனங்கள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட மக்களை ஒருங்கிணைத்து நிற்கும் நாடு இந்தியா. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 அன்று நாம் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். இந்த நாள், வெளிநாட்டு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதற்கான நினைவு நாளாக மட்டுமல்லாமல், சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் மற்றும் நீதியை அனைவருக்கும் உறுதி செய்ய வேண்டிய நாளாகவும் அமைகிறது.

சுதந்திரத்தின் உண்மையான பொருள், நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடனும், பாதுகாப்புடனும், மரியாதையுடனும் வாழ்வதாகும். இந்த அடிப்படையில் பார்க்கும்போது, சிறுபான்மையினரின் நிலை, அவர்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் கவலைகள் குறித்துச் சிந்திப்பது சுதந்திர தினத்தின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும்.


### சுதந்திர தினத்தின் முக்கியத்துவம்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. இந்தச் சுதந்திரத்தைப் பெற எண்ணற்ற தலைவர்கள், போராட்ட வீரர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் உயிரையும், உழைப்பையும் தியாகம் செய்தனர். சுதந்திரம் என்பது அரசியல் விடுதலை மட்டுமல்ல, அது சமூக நீதி, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பையும் உள்ளடக்கியதாகும்.

இந்திய அரசியலமைப்பு அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை, மதச்சார்பின்மை, கருத்துச் சுதந்திரம் மற்றும் கல்வி, வேலைவாய்ப்புப் போன்ற அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. இந்த உரிமைகள் பெரும்பான்மையினருக்கு மட்டுமல்லாமல், சிறுபான்மையினருக்கும் சமமாக வழங்கப் பட்டுள்ளன.

### சிறுபான்மையினர் யார்?

எண்ணிக்கையில் குறைவாக உள்ள மத, மொழி அல்லது கலாச்சாரக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுகின்றனர். இந்தியாவில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், பார்சிகள் போன்ற மதக் குழுக்கள் தேசிய அளவில் சிறுபான்மையினராக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். மேலும், சில மாநிலங்களில் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினரும் உள்ளனர்.



### சிறுபான்மையினரின் முக்கியக் கவலைகள்:

சுதந்திரம் கிடைத்த பிறகும் சில சிறுபான்மையினர் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். அவற்றில் சில முக்கியமானவை:

### 1. பாதுகாப்புக் குறித்த அச்சம்

சில நேரங்களில் சமூக மோதல்கள்,

மத அடிப்படையிலான பதற்றங்கள் அல்லது வன்முறைச் சம்பவங்கள் சிறுபான்மையினரிடம் பாதுகாப்புக் குறித்த அச்சத்தை ஏற்படுத்துகின்றன. சட்டம் மற்றும் ஒழுங்கு அனைவருக்கும் சமமாகச் செயல்படுவது மிகவும் அவசியம்.

### 2. கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

சில பகுதிகளில் தரமான கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் சவால்கள் இருப்பதாக ஆய்வுகள் மற்றும் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதும், திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதும் சமத்துவமான வளர்ச்சிக்கு உதவும்.

### 3. சமூகப் பாகுபாடு

மதம், மொழி அல்லது கலாச்சார வேறுபாடுகளின் காரணமாகச் சிலர் சமூகப் பாகுபாட்டை அனுபவிப்பதாக உணரலாம். இது சமூக ஒற்றுமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பரஸ்பர மரியாதையும் புரிதலும் இதற்குச் சிறந்த தீர்வாகும்.

### 4. அரசியல் பிரதிநிதித்துவம்

சிறுபான்மையினரின் தேவைகள் மற்றும் கருத்துக்கள் அரசியல் முடிவுகளில் போதுமான அளவு பிரதிபலிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் உள்ளது. ஜனநாயகத்தில் அனைவரின் குரலும் மதிக்கப்படுவது அவசியம்.

### 5. கலாச்சார அடையாளப் பாதுகாப்பு

ஒவ்வொரு சமூகமும் தனது மொழி, பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மத வழக்கங்களைப் பாதுகாக்க விரும்புகிறது. அவற்றை வளர்ப்பதற்கான உரிமை இந்திய அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சமத்துவ உரிமை, மதச்சார்பின்மை, கல்வி நிறுவனங்களை நிறுவும் உரிமை, மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் உரிமை போன்றவை அவற்றில் முக்கியமானவை.

மேலும், மத்திய மற்றும் மாநில அரசுகள் கல்வி உதவித்தொகைகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்கள் போன்ற பல்வேறு முயற்சிகளின் மூலம் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றன. இத்திட்டங்களின் செயல்திறன் மாநிலம், காலம் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடலாம்.

### சுதந்திர தினம் சொல்லும் செய்தி

சுதந்திர தினம் என்பது தேசியக் கொடியை ஏற்றும் விழாவாக மட்டும் இல்லாமல், அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்ற உறுதிமொழியை நினைவூட்டும் நாளாகும். நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியால் மட்டுமல்ல, அனைத்துச் சமூகங்களும் பாதுகாப்பாகவும், மரியாதையுடனும், சம வாய்ப்புகளுடனும் வாழ்வதில்தான் அதன் உண்மையான வெற்றி உள்ளது.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் மிகப்பெரிய பலமாகும். மதம், மொழி, இனம் ஆகிய வேறுபாடுகளைத் தாண்டி, ஒருவரையொருவர் மதிக்கும் மனப்பான்மை வளர வேண்டும். அதுவே தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும்.

சுதந்திரம் என்பது அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டிய உரிமையாகும். சிறுபான்மையினர் உட்பட ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் பாதுகாப்பாகவும், சமத்துவத்துடனும், மரியாதையுடனும் வாழும் சூழலை உருவாக்குவதே உண்மையான சுதந்திரத்தின் இலக்காகும். சுதந்திர தினத்தில் நாம் சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவுகூர்வதோடு மட்டுமல்லாமல், சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகத்தின் உயரிய மதிப்புகளைப் பாதுகாக்க உறுதியேற்க வேண்டும். அனைத்துச் சமூகங்களும் இணைந்து செயல்பட்டால்தான் இந்தியா மேலும் வலிமையான, ஒற்றுமையான மற்றும் முன்னேறிய நாடாக விளங்கும். இதுவே சுதந்திர தினம் நமக்கு வழங்கும் உயரிய செய்தியாகும்.



# புனித சுவக்கின், அன்னா திருவிழாவும் தாத்தா, பாட்டியர் நாளும்

அருள்பணி. **வ. இரபேல்**

ஆண்டுதோறும் திருஅவை புனிதர்கள் சுவக்கின், அன்னா திருவிழாவை ஜூலைத் திங்கள் 26ஆம் நாள் கொண்டாடுகிறது. அவர்கள் அன்னை மரியாவின் பெற்றோர்கள் இயேசு கிறிஸ்துவின் தாத்தா, பாட்டி ஆவார்கள். திருவிவிலியம் அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடாவிடினும், இரண்டாம் நூற்றாண்டில் உருவான யாக்கோபின் நற்செய்தி என்னும் மறைவுநூல் அவர்களைக் குறித்துக் கூறுகிறது. கிறிஸ்தவ மரபு மிகுந்த வணக்கத்துடன் அவர்களைப் போற்றி வந்துள்ளது. தாத்தா, பாட்டி என்பவர்கள் நம்முடைய இறைநம்பிக்கை மட்டில் கொண்டுள்ள பங்கை இத்திருநாள் நமக்கு எடுத்துரைக்கிறது. குடும்பத்தின் விழுமியங்களைக் கட்டிக்காத்து, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அவற்றைக் கடத்திச் செல்வதற்கு அவர்கள் பெரும்பங்கு ஆற்றுகின்றார்கள்.



புனிதர்கள் சுவக்கின், அன்னா திருநாள் என்பது தாத்தா, பாட்டியர் நாளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பது பொருத்தமானதே. 2021 ஆம் ஆண்டு, திருத்தந்தை பிரான்சிஸ் தாத்தா, பாட்டியர் மற்றும் முதியோருக்கான நாளை ஏற்படுத்தினார். அது ஜூலைத் திங்கள் நான்காம் ஞாயிறு கொண்டாடப்படுகிறது. தாத்தா, பாட்டியரின் ஞானம், தியாகம், இறைவேண்டல்கள், நிபந்தனையற்ற அன்பு ஆகியவை குடும்பங்களிலும் சமூகங்களிலும் நம் வாழ்வை மிகவும் வளம்பெறச் செய்கின்றன.

## புனிதர்கள் சுவக்கினும் அன்னாவும் கடவுளின் பிரமாணிக்கமுள்ள ஊழியர்கள்

பழங்காலக் கிறிஸ்தவ மரபுப்படி, சுவக்கினும் அன்னாவும் மிகவும் பக்தியுள்ள யூதத் தம்பதியராவர். அவர்கள் நேரிய வாழ்வு வாழ்ந்து இறைவேண்டலில் நிலைத்து நின்றவர்கள். நெடுங்காலம் அவர்களுக்குப் பிள்ளை இல்லாமலிருந்தது. அக்காலத்தில் அவர்களது பண்பாட்டில் பிள்ளைப்பேறு என்பது கடவுளின் ஆசியாகக் கருதப்பட்டு, பிள்ளைப்பேறின்மை சாபமாகக் கருதப்பட்டது. இருப்பினும், அவர்கள் ஒருபோதும் எதிர்நோக்கை இழந்துவிடவில்லை. கடவுளின் பராமரிப்பில் அவர்கள் தொடர்ந்து பற்றுறுதி கொண்டிருந்தார்கள். கடவுள் சரியான நேரத்தில் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவார் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள்.

கடவுள் அவர்களுடய இடைவிடா இறைவேண்டலைக் கேட்டு, பின்னாளில் உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் அன்னையாகப் போகும் மரியாவை அவர்களுக்குப் பிள்ளையாக வழங்கினார். சுவக்கினும் அன்னாவும் தம் மகள் மரியாவை இறைநம்பிக்கை, இறைவேண்டல், கீழ்ப்படிதல், இறைப்பற்று ஆகிய சூழலில் அன்புடன் வளர்த்தார்கள். பிரமாணிக்கமுள்ள பெற்றோராய் அவர்கள் மரியாவைப் பொறுப்புடன் வளர்த்து, மரியா கடவுளின் அழைப்புக்குப் பொறுப்புடன் பதிலிறுக்குமாறு அவரைத் தயாரித்தார்கள்.

சுவக்கின், அன்னா ஆகியோரைக் குறித்து வரலாற்றுப்பூர்வமாக நாம் மிகுதியாக அறியாவிடினும், அவர்களது வாழ்க்கை நமக்கு நல்ல படிப்பினையைத் தருகிறது. பொறுமை, விடாமுயற்சி, கடவுளின் திருவுளத்திற்கு முழுவதும் நம்மைக் கையளித்தல் ஆகிய உயர் பண்புநலன்களை நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறோம். அன்பு, இறைவேண்டல், இறைநம்பிக்கை ஆகியவை இடம்பெற்றிருக்கும் ஒவ்வோர் எளிமையான இல்லத்திலும் புனிதம் என்பது சத்தமின்றி வளர்கிறது என்பதை அவர்களின் வாழ்வினின்று நாம் கற்றுக்கொள்கிறோம்.

## தாத்தா, பாட்டியரின் உயரிய அழைப்பு

ஒவ்வொரு குடும்பத்திலும் தாத்தா, பாட்டியர் தனித்துவமான இடத்தை வகிக்கின்றனர். அவர்களே குடும்ப வரலாற்றுக்கு வாழும் சாட்சிகள் ஆவார்கள். அவர்களே மரபுகளைக் கட்டிக்காக்கின்றவர்கள். அவர்கள் பல ஆண்டுகளாக வாழ்ந்து பெற்றுக்கொண்ட ஞானத்தைக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் உரைக்கும் கதைகளும், அவர்கள் தரும் அறிவுரைகளும், அவர்கள் எழுப்பும் இறைவேண்டல்களும் இளைய தலைமுறையினருக்கு விலை மதிப்பில்லாப் புதையலாக உள்ளன.

வேகமாக மாறிவரும் இன்றைய உலகில், வேகமான வாழ்க்கை, புலம்பெயர்தல், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை இன்றைய குடும்பங்கள் சந்திக்கின்றன. இத்தகு சூழலில் தாத்தா, பாட்டியர் உளநலம், உணர்வு ஆகியவை சார்ந்த பாதுகாப்பை வழங்குகின்றார்கள். தாத்தா, பாட்டியரின் உடனிருப்பு, ஆறுதலையும் ஊக்கத்தையும் கொண்டுவருகின்றது. அவர்களது உடனிருப்பால், குடும்பத்தில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்கின்றனர்.

தாத்தா, பாட்டியர் பலர் பேரப்பிள்ளைகளை நேரடியாகவே வளர்க்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் பேரப்பிள்ளைகளுக்குச் செபங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள்; திருவிவிலியக்




கதைகளை எடுத்துரைக்கிறார்கள்; நேர்மை, இரக்கம், மன்னிப்பு ஆகிய விழுமியங்களை அவர்கள் நேரடியாகப் பேரப்பிள்ளைகளின் உள்ளத்தில் ஊன்ற முடிகிறது. பெரும்பாலும், இறைநம்பிக்கை குறித்த ஆழமான பாடங்கள் வகுப்பறையில் கற்றுக்கொள்ளப்படுவது இல்லை; அவை தாத்தா, பாட்டியரின் மடியில் கற்றுக்கொள்ளப்படுகின்றன. அன்பு, கடவுள்பற்று ஆகியவற்றைத் தாத்தா, பாட்டியர்

அன்றாடம் வெளிப்படுத்தி அவற்றைப் பேரப்பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

இறைநம்பிக்கையை அடுத்த தலைமுறைக்குக் கடத்திவருவது பெற்றோரின் கடமை மட்டுமல்லாமல், அது தாத்தா, பாட்டியரின் கடமையாகவும் இருக்கிறது என்பதைச் சுவக்கின், அன்னா ஆகியோரின் வாழ்வு நமக்கு எடுத்துரைக்கிறது. குடும்பத்தில் இறைம்பிக்கையைப் பேணிவளர்த்து, குடும்ப உறவுகளை வலுப்படுத்தும் புனிதப் பொறுப்பைத் தாத்தா, பாட்டியர் கொண்டுள்ளார்கள்.

வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், குடும்பங்களில் இறைநம்பிக்கையைத் தாத்தா, பாட்டியர் கட்டிக்காத்து வந்ததை அறியலாம். காலம் மாறிக்கொண்டிருந்தாலும், பல குடும்பங்களில் சமய மரபுகள் தொடர்ந்து விளங்கிடத் தாத்தா, பாட்டியர் ஆவன



செய்துவருகிறார்கள். பிள்ளைகள் சிலுவை அடையாளம் இடவும், செபமாலை சொல்லவும், திருவிவிலியத்தை வாசிக்கவும், திருஅவையின் செயல்பாடுகள் பலவற்றில் பங்கெடுக்கவும் தாத்தா, பாட்டியர் கற்றுக்கொடுக்கிறார்கள்.

தாத்தா, பாட்டியரின் அமைதியான எடுத்துக்காட்டான வாழ்வு பிள்ளைகளிடம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் செபிக்கும் காட்சி, திருப்பலியில் ஒவ்வொரு நாளும் பங்கேற்பது, அடுத்திருப்பாருக்கு உதவுவது, மற்றவர்களை மன்னிப்பது, நெருக்கடியான சூழல்களிலும் கடவுளிடம் பற்றுக் கொண்டிருப்பது ஆகியவை பிள்ளைகளிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தாத்தா, பாட்டியரின் இத்தகு எடுத்துக்காட்டுகள் வார்த்தைகளைவிட வலுவாகப் பேசுகின்றன.

சுவக்கினும் அன்னாவும் அன்னை மரியாவை வளர்த்த முறையினால், அவர்கள் அகில உலகிற்கும் கடவுள் கொண்டுள்ள மீட்புத் திட்டத்தில் பங்கேற்கிறார்கள். அதேபோல். ஒரு பிள்ளை கடவுளை அன்பு செய்திடுமாறு கற்றுக்கொடுக்கும் தாத்தா, பாட்டியர் யாவரும் இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியில் பங்கெடுக்கிறார்கள்.

## தாத்தா, பாட்டியருக்கு மரியாதை செய்து, அவர்களுக்கு நன்றிகூறும் நாள்

தாத்தா, பாட்டியர் நாள் என்பது வெறுமனே ஒரு கொண்டாட்டத்திற்கான நாள் மட்டுமன்று. அது நாம் பொதுவாகக் கவனிக்காமல் கடந்துபோகும் எண்ணறு நற்செயல்களையும் தியாகங்களையும் நினைவுகூர்ந்து அவற்றிற்காகத் தாத்தா, பாட்டியருக்கு நன்றிகூறிட வாய்ப்பளிக்கும் நாளாகும். தாத்தா, பாட்டியரை மகிழ்வுபடுத்தும் வண்ணமாக இந்த நாளில் சில அடையாளச் செயல்களை நாம் செய்திடவும் வேண்டும்.

நமது சமூகம் வயதானவர்களை மறந்துவிடுகிறது; இளமையைத்தான் போற்றுகிறது. நமது சமூகம் பல வேளைகளில் ஞானத்தையும் அனுபவத்தையும் கண்டு கொள்வதில்லை. சுவக்கின், அன்னா திருநாள் நமக்கு நல்ல படிப்பினையைத் தருகிறது. வயதானவர்களை மதிக்கவும், அவர்களின் பெருமையை உணரவும், அவர்கள் வழங்கும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவும் நம்மைத் தூண்டுகிற நாளாக இது அமையட்டும்.



# வேற்றுமையின் பூங்காவில் நல்லிணக்க ஒளி

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாளான ஆகஸ்ட் 20-ஆம் தேதி, ஒவ்வொரு ஆண்டும் சத்பாவனா திவாஸ் (Sadbhavana Diwas), அதாவது நல்லிணக்க தினமாகக் கொண்டாடப்படுகிறது. பல்வேறு மதங்கள், மொழிகள் மற்றும் கலாச்சாரங்களைக் கொண்ட இந்திய மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு, அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே இந்நாளின் முக்கிய நோக்கம்.

**நல்லிணக்கம் என்பது**

நல்லிணக்கம் என்பது வெறும் அமைதி அல்ல. அது இதயங்களின் இசை. மகாத்மாவின் வார்த்தைகளில், "**உண்மையும் அஹிம்சையும்**" இணைந்து உருவாகும் பேரொளி. இது வேறுபாடுகளை அழிக்காமல், அவற்றை அரவணைத்து, ஒரு பெரிய இசையாக மாற்றும் கலை. இது பௌத்த தத்துவத்தில் "**மைத்ரி**" (Maitri) - அன்பின் பரவல்; இஸ்லாமிய சூஃபி மரபில் "**இத்தியாத்**" (Ithiyat) - உள்ளார்ந்த சமநிலை. இந்து தர்மத்தில் "**வசுதைவ குடும்பகம்**" (Vasudhaiva Kutumbakam) - உலகமே ஒரு குடும்பம்; கிறிஸ்தவத்தில் "**அகாப்பே**" (Agape) - சுயம்கடந்த எல்லையற்ற அன்பு. தனி மனிதனின் உள்ளத்தில் தொடங்கி, சமூகம், நாடு, உலகம் வரை பரவும் ஒரு ஆன்மீக ஆற்றலே நல்லிணக்கம்! வேற்றுமையை வலிமையாகக் கொண்டாடும் இப்பூங்காவில் இன்று களைகள் பல முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. அனைத்தையும் ஒற்றை மயமாக்கி பன்முகத்தன்மைக்கு பங்கம் விளைவிக்கும் போக்கு அரசியல் சூழ்ச்சியாகத் தொடர்வது இந்திய இறையாண்மைக்கு ஆபத்து.




**ஏன் இன்று இதன் தேவை அதிகரித்துள்ளது?**

உலக அமைதிச் சுற்றெண் (Global Peace Index) 2026 படி, இன்று உலக அமைதி கடந்த 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து சரிந்து கொண்டே வருகிறது. 2008 உடன் ஒப்பிடுகையில் 119 நாடுகளில் அமைதி நலிவுற்றுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 61 உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒட்டுமொத்த மனித குலத்திற்கே அச்சம் தரும் செய்தி. 2025-ல் மட்டும் 1,81,000-க்கும் மேற்பட்டோர் போரில் உயிரிழந்தனர். வன்முறையின் பொருளாதாரச் செலவு 21.81 டிரில்லியன் டாலர். இது உலக GDP-யில் 10.5%.

பெருகி வரும் செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கத்தால் ட்ரோன் தாக்குதல்கள் உயர்ந்துள்ளன. AI போர்கள் மனித முடிவெடுப்பைவிட வேகமாகிவிட்டன. சமூக ஊடகங்கள் பொய்யையும் வெறுப்பையும் பரப்புகின்றன. உலகின் பல்வேறு நாடுகளில் தொடரும் இனவாதம், மத அடிப்படைவாதம்,

பொருளாதார ஏற்றத்தாழ்வு, அரசியல் சுயநலம் மற்றும் சுற்றுச்சூழல் - இவை அனைத்தும் உலகளாவிய நல்லிணக்கத்தைச் சிதைக்கின்றன. உலகம் சுருங்கியிருந்தாலும், இதயங்கள் விலகிக் கொண்டிருக்கின்றன. வளர்ச்சிகள் வேகப்பட்டாலும் மானுட வீழ்ச்சிகள் தொடர் கதையாகின்றன.

**நாம் என்ன செய்யலாம்?**

நல்லிணக்கம் வானத்திலிருந்து வராது, நம் அன்றாட செயல்களிலிருந்து மட்டுமே உருவாகும். எனவே நாம் முன்னெடுக்கச் சில பரிந்துரைகள்.

➲ **தனிநபர் மட்டத்தில்** : மனிதர் அனைவரும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் (தொநூ 1:27). இதுவே சக மனிதரை மதிக்கும் மாண்பை நம்மிடம் வளர்க்கிறது. ஒவ்வொரு நாளும் சந்திக்கும் நபர்களுடன் ஒரு புன்னகை பகிர்வோம். மார்ட்டின் பூபரின் நான்-அது (I-It), நான்-நீ (I and Thou) உறவுநிலை தெளிதல் நல்லிணக்கத்தின் மிக முக்கிய அடித்தளம். "**நான்-அது**" என்று மற்றவரைப் பொருளாக, பயன்படுத்தக்கூடிய மனநிலை என்பது பயன்பாடு, பகுப்பாய்வு மற்றும் சுயநலத்தை உருவாக்கும். ஆனால், "**நான்-நீ**" என்கிற நேரடி, பரஸ்பர உறவு மற்றவர் தனித்துவத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும், உரையாடல் வழி உறவுகளை வலுப்படுத்தவும் வழிவகுக்கும். ஒருபோதும் மற்றவரைப் பொருளாகப் பயன்படுத்தித் தூக்கி எறியாமல் பார்த்துக் கொள்வோம்.

➲ **குடும்பம் மற்றும் சமூகத்தில்** : குழந்தைகளுக்குப் பன்மைத்துவத்தைக் கற்பிப்போம். வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, "**நான் உன்னைப் போல் இல்லை, ஆனால் நீ என் சகோதரன்**" என்கிற மனநிலையில் சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து செயல்பட ஊக்கப்படுத்துவோம். வேண்டியவர், வேண்டாதவர் என்கிற பாகுபாட்டைக் கடைபிடிக்க ஒருபோதும் அனுமதியோம்.

➲ **தேசிய மட்டத்தில்** : சம உரிமைகள், நீதி, கல்வி மூலம் ஒற்றுமையை வலுப்படுத்துவோம். இராஜீவ் காந்தி அவர்களின் பார்வையில், தொழில்நுட்பமும் அறிவும் மனிதத்துவத்துடன் இணைய வேண்டும் என்பதனை வளர்ச்சி நோக்கிய பாதையில் முதன்மையாக்குவோம்.

➲ **உலக அளவில்** : ஐ.நா.வின் உலகளாவிய நல்லிணக்க முயற்சிகளை வலுப்படுத்துவோம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மூலம் பொது எதிர்காலத்தை உருவாக்குவோம்.

நல்லிணக்கம் ஒரு தொடர் செயல்முறை. உறவுகளின் தளத்தில், பொறுப்பு மற்றும் அன்பின் மூலம் அது கட்டியெழுப்பப்படுகிறது. "**உலகை மாற்ற வேண்டுமென்றால், முதலில் உன் இதயத்தை மாற்று.**" (லாவ்-ட்சு) ஒவ்வொரு சிறு செயலும் கடலின் ஓர் அலை. அலைகளால் கடல் நம்மைத் தாலாட்டுவதும், தடுக்கி விழ வைப்பதும் நாம் அணுகும் முறைகளிலே உள்ளது. இதனை மறவோம்!

திருத்தூதர் பேதுரு கிறிஸ்தவர்களை உயிருள்ள கற்கள்‘ என்று அழைக்கிறார். இன்று நாம் உயிருள்ள திருஅவையாக இருக்க வேண்டுமெனில் முதலில் கிறிஸ்துவோடு உறுதியாக இணைந்திருக்க வேண்டும். அவரே திருஅவையின் மூலைக்கல். நமது அனைத்து பணிகளும், திட்டங்களும், முயற்சிகளும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நாம் சிதறாமல், ஒன்றுபட்ட சகோதரத்துவத்தோடு இறையாட்சிக்காக மகிழ்வுடன் உழைக்க முடியும்.

**திருத்தந்தை 14-ஆம் லியோ**



# நம்பிக்கையில் நம்மை ஆழப்படுத்தும்

## *புனித தோமாவும், புனித யாக்கோபும்*

அருள்பணி. **செ. காட்வின் செல்வ ஜஸ்டஸ்**

கிறிஸ்து இயேசு பிறந்த இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்த காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இன்னும் நம்மால் கிறிஸ்துவோடு நம்மை ஒன்றிணைக்க முடிகிறது என்றால் அதற்குக் காரணம் நம்மோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய புனிதர்களின் வாழ்வின் நினைவுகள்தான். இன்று நாம் சிந்திக்கக்கூடிய இரண்டு புனிதர்களுமே கிறிஸ்து இயேசுவோடு



இணைந்து பயணித்தவர்கள், அவரை முகமுகமாய்க் கண்டவர்கள், அவரோடு உறவாடி உரையாடி மகிழ்ந்தவர்கள். கிறிஸ்து இயேசுவின் இறப்பு, உயிர்ப்புக்குப்பிறகு எத்தகைய சாட்சிய வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதில்தான் கிறிஸ்துவின் மகிமை விளங்குகிறது. இருவருமே கிறிஸ்துவுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள். புனித தோமையார் நமது மண்ணிலே ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார். சென்னை சாந்தோம் பேராலயத்திலே அமைந்திருக்கின்ற அவரது கல்லறை அதற்குச் சான்று. புனித யாக்கோபோ எருசலேமிலே தலை வெட்டப்பட்டு இறந்தார். திருஅவையின் முதல் மறைசாட்சி என்று அறிகின்றோம். அவர்கள் சிந்திய இரத்தம்தான் நமது நம்பிக்கையின் விதையாக மாறியது.

புனித தோமையாரின் வாழ்க்கைப் பின்னணி என்ன என்று சிந்திக்கின்றபோது, அவர் கலிலேயப்பகுதியிலே ஒரு சாதாரண மீனவக்குடும்பத்தில் பிறந்தவர் என்று அறியப்படுகின்றார். ஆண்டவர் இயேசுவால் ஆட்கொள்ளப்படுவதற்கு முன்பு மீன்பிடித் தொழிலையே செய்து வருகின்றார். ஆண்டவரின் குரலைக் கேட்டவுடன் இதோ வருகிறேன் என்று கூறி அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றுகின்றார். கிறிஸ்துவோடு சேர்ந்து இறப்பதற்கு எப்போதும் தயாராக இருந்தவர் புனித தோமா (யோவா 11:16). ஆண்டவர் செல்லும் வழியைத் தானும் அறிய வேண்டும் என்று முனைப்புக் காட்டியவர் (யோவா 14:4). உண்மையாகவே கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை உணர்வுப் பூர்வமாக மட்டுமல்ல, அறிவியற் பூர்வமாகவே அறிய முற்பட்டவர் (யோவா 20:25), அதே நேரத்தில் உயிர்த்த ஆண்டவரைக் கண்டபொழுது தனது நம்பிக்கையை உள்ளத்தின் ஆழத்திலிருந்து அறிக்கையிட்டவர் (யோவா 20:28). அந்த நம்பிக்கையின் ஆழம்

எத்தகையது என்றால் உலகின் கடைகோடி என்று அறியப்பட்ட இந்தியாவிற்குப் பயணிக்கத் துணிந்தார். கிறிஸ்துவின் ஒளியை நமக்குக் கொண்டு வந்தார். இன்றும் கேரளாவில் புனித தோமையார் கிறிஸ்தவர்கள் என்றே அறியப்படுகின்ற கிறிஸ்தவச் சமூகம் இதற்குச் சாட்சி. இவர் கிறிஸ்துவுக்காக எட்டு ஆலயங்களை எழுப்பினார். அந்த ஆலயங்களில் ஒன்று இன்றும் நமது கன்னியாகுமரி மண்ணில் கம்பீரமாய்க் காட்சி தருகின்ற திருவிதாங்கோடு அரப்பள்ளி என்று அறிகின்றோம். நமது இந்திய மண்ணின் தொடக்க கால கிறிஸ்தவர்களின் பாதுகாவலராக அவரது நம்பிக்கையின் ஆற்றலால் நமது மண்ணிலேயே விதையாய் விதைக்கப்பட்டு இன்றும் நம்மிலே விருட்சமாய் வளர்ந்து நிற்கின்றார்.

புனித யாக்கோபு செபதேயுவின் மகனும் ஆண்டவரின் நெருக்கமான சீடருமான புனித யோவானின் சகோதரருமாக அறியப்படுகின்றார் (மத்4:21). இவரும் ஆண்டவர் அழைக்கின்றபோது மீன் பிடித்துக் கொண்டிருக்கின்றார். ஆண்டவர் இவர்களை இடியின் மக்கள் என்று அழைக்கின்றார் (மாற் 3:17). ஆண்டவரிடம் மிக நெருக்கமாக இருந்த மூன்று சீடர்களுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. யாயீரின் மகளை உயிர்ப்பித்த நிகழ்விலும், ஆண்டவரின் தோற்ற மாற்றத்தின்போதும், இயேசு கெத்சமனித் தோட்டதில் இரத்த வியர்வை வியர்த்த நேரத்திலும் உடனிருந்த சீடர்களுள் இவரும் ஒருவர். அந்த அளவுக்கு ஆண்டவரின் நம்பிக்கையை மிக ஆழமாகப் பெற்றிருந்தார். இவரது சீடத்துவப் பணியை மரபு அடிப்படையிலே சிந்திக்கிறபோது ஸ்பெயின் நாட்டில் நற்செய்திப் பணியாற்றிக் கிறிஸ்துவைப் போதித்துத் திருஅவைகளை கட்டியெழுப்பி, பின்பு எருசலேம் திரும்பினார் என்று அறியப் படுகின்றது. எனவேதான் ஸ்பெயின் நாட்டினரின் பாதுகாவலராக இன்றும் போற்றப்படுகின்றார்.



இரண்டு புனிதர்களும் தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் அளவிற்குக் கிறிஸ்துவை அன்பு செய்து, அவரது நற்செய்தியை உலகின் எத்திக்கிலும் கொண்டு சென்றார்கள். அவர்களை நினைவு கூருகின்ற இந்த மாதத்தில் கிறிஸ்துவின்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை ஆழப்படுத்துவோம். திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் அனைவருமே கிறிஸ்துவுக்காக வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்வோம். கிறிஸ்துவை நம் வார்த்தையாலும், வாழ்வாலும் அறிவிக்காதவரை நமது கிறிஸ்தவ வாழ்வு நிறைவடையாது என்பதை நினைவுப் படுத்துவோம். இந்தப் புனிதர்களைப்போல நாமும் புறப்பட்டுச் செல்வோம், கடல் கடந்து அல்ல, நாம் வாழக்கூடிய நமது சமூகத்தில், அங்கே கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்பதை அனைவரும் புரிய வைப்போம்.



# நட்பே பிரதானம்!


பரக்குன்று **சேவியர்**

வரலாற்றையே புரட்டிப் போட்ட மன்னர் தாவீதுக்கே நட்பு தேவைப்பட்டது ! யோனத்தான் தாவீதின் இக்கட்டான நேரத்தில் கைகொடுத்துக் காப்பாற்றியவர். நண்பனுக்காகத் தன் குடும்பத்துக்கு எதிராகவே நிற்கத் துணிந்தவர். அதுவே நட்பு!

நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நட்பு மிகவும் அவசியம். கடல் அமைதியாக இருக்கும்போது நம்மோடு படகில் பயணிக்க ஏராளமானோர் இருப்பார்கள். ஆனால் புயல் சூழும்போதோ நண்பர்கள் மட்டுமே இருப்பார்கள். நட்பு என்பது நம்மை நோக்கி நீளும் இறைவனின் கரம். வெற்றி நமக்குப் பலரை அறிமுகப்படுத்தி வைக்கும், வலிகளே நமக்கு நல்ல நண்பர்களை அறிமுகப்படுத்தி வைக்கும். நாம் மூழ்கிப் போகும் தருணங்களில் நம்மை மேலே இழுக்கும் கருணையின் கரம், நட்பே!

நண்பர்கள் நமது கண்ணாடி போல. நாம் இருப்பதைப் போல நம்மைப் பிரதிபலிப்பார்கள். நாம் எப்படி இருக்கிறோம் என்பதை ஒளிவு மறைவில்லாமல் கண்ணாடி காட்டிவிடும். நம்மை மகிழ்ச்சிப்படுத்த அது நம்மை உயர்வாய்க் காட்டுவதில்லை. அல்லது நம்மீது கோபம் கொண்டு நம்மை அசிங்கமாய்க் காட்டுவதில்லை. நம்மை சரிசெய்யும் நண்பர்களே, நம்மைப் புகழும் கூட்டத்தை விட நமக்குத் தேவை. நமது பிழைகளைச் சுட்டிக்காட்டாத நண்பர்கள், உண்மையில் நம்மோடு இருக்க விரும்புகிறார்கள், ஆனால் நாம் சிறப்பாய் இருக்க வேண்டுமென விரும்புவதில்லை.

உண்மையான நட்பு என்பது பாராட்டுகளினால் உருவாவது அல்ல, அது உண்மையினால் உருவாவது! நமது வளமையின் காலங்களில் அல்ல, நம் வீழ்ச்சியின் காலங்களில்தான் நட்பு நம்மோடு இறுக்கமாகும். "**அவனைப் பாத்து பத்து வருஷம் ஆச்சு**" என்பவர்கள் கூட, நேரில் பார்க்கும்போது ஏதோ நேற்று இரவுதான் பிரிந்தது போல அணைத்துக் கொள்வார்கள், பேசிக்கொள்வார்கள். அதுவே நட்பின் சிறப்பம்சம்.



உண்மையான நட்பு நம் கிளைகளில் கனிகள் தொங்கும்போதல்ல, நம் இலையுதிர்க் காலங்களில் நம்மோடு இருக்கும். உலகமே நம்மை விட்டு விலகிச் செல்லும்போது நம்மை நோக்கி நெருங்கி வரும் ஒரு நிழல் தெரியுமெனில், அதுவே உண்மையான நட்பு!

நட்பு நம்முடைய இருள் காலங்களின் நீளத்தைக் குறைப்பதில்லை. ஆனால் அந்தத் தொலைவை நம்மோடுகூட இணைந்தே நடந்து கடக்கும். நகோமி அனைத்தையும் இழந்து நின்றபோது "**நீங்கள் எங்கே சென்றாலும் உம்மோடு வருவேன்**" என்று சொன்ன ரூத்தைப் போன்றது உண்மையான நட்பின் இலக்கணம்.

உன் நண்பர்களைக் காட்டு, உன் எதிர்காலத்தை நான் சொல்கிறேன் என்றொரு பழமொழி உண்டு. உண்மைதான். இரும்பு இரும்பைக் கூராக்குவது போல, நல்ல நட்பு நம்மைக் கூராக்கும். நாம் வளைந்திருந்தால் நேராக்கும். நம் வாழ்க்கையைச் சீராக்கும். நமது இயல்பை அல்ல, நமது இலக்கை நல்ல நட்பு மாற்றியமைக்கும்.

இயேசுவுக்கே நண்பர்கள் தேவைப் பட்டார்கள். பன்னிரண்டு நண்பர்களை அவர் வைத்திருந்தார். அவர்கள் சீடர்களாக, பக்தர்களாக, நண்பர்களாக, சகோதரர்களாக வாழ்ந்தார்கள். அந்தப் பன்னிரண்டு



நண்பர்களும்தான் இன்றைக்கு நாம் இயேசுவை அறியக் காரணம்! இயேசுவுக்கு அன்று நண்பர்கள் இல்லாமல் போயிருந்தால், இன்றைக்கு நாம் இயேசுவை அறியாமல் போயிருப்போம்.

உலகம் நட்பை பல விதங்களில் அடையாளப்படுத்தும். பல விதங்களில் விளக்கும். ஆனால் இயேசு நட்பை விளக்கியதே ஆகச் சிறந்த விளக்கம். தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதே மேலான அன்பு, நட்பு! அதுவே இயேசு சொன்னது. நட்பு என்பது தன் உயிரையும் கொடுக்கத் தயாராய் இருப்பது. நட்பு என்பது எவ்வளவு நேரம் செலவிட்டோம் என்பதல்ல, எதைச் செலவிட்டோம் என்பதே. உயிரைக் கூடச் செலவிடத் தயாராய் இருக்குமிடத்தில் இருக்கிறது உயிரினும் மேலான நட்பு. நல்ல நண்பன் நேரத்தைக் கொடுப்பான், மேலான நண்பன் தன்னையே கொடுப்பான்

இன்றைய உலகில் மன அழுத்தம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது, காரணம் நல்ல நண்பர்கள் இல்லாமைதான். நல்ல நண்பர்கள் இருப்பவர்களுக்கு மன அழுத்தம் வரும் வாய்ப்பு மிகவும் குறைவு.

இன்றைய உலகில் தனிமை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. டிஜிட்டல் வெளிகளில் நட்பைத் தேடி, நிஜ வாழ்க்கையின் நட்பை உணராமல் இருப்பதே அதன் காரணம்.

இன்றைய உலகில் உறவுகள் நீர்த்துப் போய் கிடக்கின்றன. மனிதனுக்குப் பணமும், வசதியும், வேலையும் எல்லாம் தேவை தான். ஆனால் எல்லாவற்றையும்விட முக்கியமாக, உனக்கு நான் இருக்கிறேன் என்று சொல்லும் நட்பு மிகவும் தேவை.

பவுலுக்கு திமொத்தேயு ஒரு மகனைப் போல இருந்த நண்பர்! ஆன்மீகச் செழுமைக்கு இருவரும் இணைந்து நடந்தார்கள். தானியேலுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் அவர்கள் தயாராய் இருந்தார்கள். நல்ல நட்பு நம்மை இறைவனை நோக்கி நடத்தும்! நம்மைச் சோதனைகளிலிருந்து காக்கும்! நம்மோடு நடப்பவர்கள் மட்டுமல்ல, நம்மைக் கடவுளை நோக்கி நடத்துபவர்களாகவும் நண்பர்கள் இருக்க வேண்டும்.

மோசேக்கு ஆரோன் நண்பராய் இருந்தார், எலியாவுக்கு எலிசா இருந்தார், பவுலுக்குச் சீலா நண்பராய் இருந்தார். இப்படி விவிலியம் பல உதாரணங்களை நமக்குத் தருகிறது!

நாம் எப்படிப்பட்ட நண்பராய் இருக்கிறோம்? உயிரைக் கொடுக்கவும் தயாராய் இருக்கிறோமா? கடவுளை நோக்கி நடத்தவும் முயற்சி எடுக்கிறோமா?

**சிந்திப்போம், நட்பைக் கொண்டாடுவோம்.**

# ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கும் இளைஞர்கள்

சகோ. **ஆன் ஜியோ கிறைஸ்ட்,**
முதலாமாண்டு மெய்யியல்

இளைஞர்கள் ஒரு நாட்டின் உயிர்நாடியாகவும், உலகத்தின் எதிர்கால நம்பிக்கையாகவும் விளங்குகின்றனர். ஒரு சமூகத்தின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அந்தச் சமூகத்தில் வாழும் இளைஞர்களின் சிந்தனை, செயல்பாடு மற்றும் பொறுப்பு உணர்வைச் சார்ந்துள்ளது. இன்றைய உலகம் பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறது. மனிதர்களிடையே பிரிவினை, வெறுப்பு, வன்முறை, சமூக அநீதி போன்ற பிரச்சனைகள் காணப்படுகின்றன. இத்தகைய சூழலில் அன்பு, அமைதி, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்கும் மிகப்பெரிய பொறுப்பு இளைஞர்களிடம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 17 அன்று உலக இளைஞர்



தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இளைஞர்களின் திறமைகளை வெளிப் படுத்தவும், அவர்களைச் சமூக மாற்றத்தின் கருவிகளாக உருவாக்கவும் இது ஒரு அழைப்பாக உள்ளது. இளைஞர்கள் தங்கள் ஆற்றலை நல்ல வழியில் பயன்படுத்தும்போது, அவர்கள் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

### சமூகத்தில் இளைஞர்களின் முக்கியத்துவம்

இளைஞர்கள் ஒரு சமூகத்தின் மாற்றத்திற்கான முக்கியமான சக்தியாக உள்ளனர். அவர்களிடம் உள்ள உத்வேகம், படைப்பாற்றல் மற்றும் புதிய சிந்தனைகள் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. வரலாற்றில் பல பெரிய மாற்றங்கள் இளைஞர்களின் பங்களிப்பால் ஏற்பட்டுள்ளன. கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், கலை, சமூகச் சேவை போன்ற பல துறைகளில் இளைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் தனிப்பட்ட வெற்றியை மட்டும் நோக்காமல், சமூகத்தின் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு நல்ல இளைஞன் தன்னை மட்டும் உயர்த்திக் கொள்வதில்லை; தன்னைச் சுற்றியுள்ள மக்களையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முயற்சி செய்கிறான். பிறரின் துன்பங்களைப் புரிந்துகொண்டு உதவும் மனப்பான்மை கொண்ட இளைஞர்களே உண்மையான சமூகத் தலைவர்களாக மாறுகின்றனர்.

### ஒற்றுமையின் மதிப்பு

ஒற்றுமை என்பது ஒரு சமூகத்தின் மிகப்பெரிய பலமாகும். "**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு**" என்பார் போல, மக்கள் ஒருவரையொருவர் மதித்து, புரிந்துகொண்டு, இணைந்து வாழும்போது அந்தச் சமூகம் வலிமையானதாக மாறுகிறது. வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு

வாழ்வதே உண்மையான ஒற்றுமையாகும். இளைஞர்கள் சாதி, மதம், மொழி, கலாச்சாரம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் சமமாகப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு மனிதருக்கும் மரியாதை கொடுக்கும் பண்பு அவர்களிடம் வளர வேண்டும். ஒற்றுமையற்ற சமூகம் வளர்ச்சியை இழக்கும். எனவே இளைஞர்கள் தங்கள் நடத்தை மற்றும் செயல்களின் மூலம் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

## நல்லிணக்கத்தை உருவாக்கும் இளைஞர்களின் பங்கு

நல்லிணக்கம் என்பது அன்பு, புரிதல் மற்றும் சகோதரத்துவத்தின் அடிப்படையில் உருவாகும் ஒரு நல்ல உறவு ஆகும். சமூகத்தில் அமைதி நிலவ வேண்டுமானால் மக்கள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இளைஞர்கள் சமூகச் சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் நல்லிணக்கத்தை வளர்க்க முடியும். ஏழைகள், நோயாளிகள், உதவி தேவைப்படுபவர்கள் ஆகியோருக்கு உதவுவது மனித நேயத்தை வெளிப்படுத்துகிறது. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி உதவி, இரத்த தானம், சமூக விழிப்புணர்வு போன்ற செயல்களில் இளைஞர்கள் பங்கேற்பது சமூகத்தில் நல்ல மாற்றங்களை உருவாக்கும். அன்பான ஒரு வார்த்தை, சிறிய உதவி, பிறரை மதிக்கும் ஒரு செயல்கூட நல்லிணக்கத்தை உருவாக்கும் விதையாக அமையும்.

## நவீன உலகில் இளைஞர்களின் சவால்கள்

இன்றைய இளைஞர்கள் பல்வேறு சவால்களைச் சந்திக்கின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சி வாழ்க்கையை எளிதாக்கியுள்ளதுடன், சில புதிய பிரச்சனைகளையும் உருவாக்கியுள்ளது. சமூக ஊடகங்களில் பரவும் தவறான கருத்துகள், வெறுப்புப் பேச்சுகள் மற்றும் பிரிவினை எண்ணங்கள் சமூக ஒற்றுமையை பாதிக்கக்கூடும். எனவே இளைஞர்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டும். உண்மையை அறிந்து, நல்ல கருத்துகளைப் பகிர்ந்து, சமூகத்திற்கு பயனுள்ள செயல்களில் ஈடுபட வேண்டும். வெறுப்பை வளர்ப்பவர்களாக அல்லாமல், அமைதியை உருவாக்குபவர்களாக இளைஞர்கள் இருக்க வேண்டும். பிரச்சினைகளை அதிகரிப்பதற்கு பதிலாக, அவற்றுக்கு நல்ல தீர்வுகளைத் தேடும் மனப்பான்மை வேண்டும்.

## சிறந்த சமூகத்தை உருவாக்கும் இளைஞர்களின் கனவு

ஒற்றுமையும் நல்லிணக்கமும் நிறைந்த சமூகமே மனிதகுலத்தின் சிறந்த எதிர்காலமாகும். அந்த எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பு இளைஞர்களிடம் உள்ளது. ஒவ்வொரு இளைஞனும் அன்பு, நேர்மை, பொறுப்பு, சேவை மற்றும் மனிதநேயம் போன்ற பண்புகளை வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும். அவர்கள் தங்கள் செயல்களின் மூலம் மற்றவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். இளைஞர்களின் சிறிய முயற்சிகள் கூடப் பெரிய மாற்றங்களை உருவாக்கும். ஒரு நல்ல சிந்தனை, ஒரு நல்ல செயல், ஒரு நல்ல வார்த்தை கூட சமூகத்தில் நம்பிக்கையை உருவாக்கும்.

இளைஞர்கள் சமூகத்தின் எதிர்காலம் மட்டுமல்ல, இன்றைய மாற்றத்தின் சக்தியும் ஆவர். அவர்கள் ஒற்றுமையையும்



நல்லிணக்கத்தையும் வளர்க்கும்போது உலகம் அமைதியும் அன்பும் நிறைந்த இடமாக மாறும். உலக இளைஞர் தினம் இளைஞர்களுக்கு ஒரு முக்கியமான செய்தியை வழங்குகிறது:

**"உங்கள் ஆற்றலே நல்ல மாற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் வழிவகுக்கும்".** ஒற்றுமையை வளர்க்கும் ஒவ்வொரு இளைஞரும், நல்லிணக்கமான உலகை உருவாக்கும் ஒரு நம்பிக்கையின் ஒளியாக இருக்கிறார்.



# பெற்றோரின் பொறுப்புணர்வு

வேதியர். **விஜிலா**

இறைவன் பார்ப்பதுபோல் அன்பு செய்வோரை ஆழ்ந்து பார்ப்பதும் அவர்களில் கிறிஸ்துவைக் காணுவதும் ஆழமான அருள்வாழ்வு அனுபவமாகும் (அன்பின் மகிழ்ச்சி, 322), பிள்ளைகளின் வாழ்வில் பெற்றோர் வேர்கள். வேர்கள் வலிமையாக இருந்தால்தான் மரம் செழித்து வளரும். பெற்றேராக இருந்து நம் பிள்ளைகளுக்கு என்ன முதன்மைகளைக் கற்றுக் கொடுக்கின்றோம் என்பதைச் சிந்திப்பதும், அதே வேளையில் ஆசையினால், அறநெறியற்ற வாழ்வு முறையால், திரைமோகத்தால் இச்சமூகம் எங்கே சென்று கொண்டிருக்கிறது என ஆய்வு செய்வதும் இன்றைய தேவையாகும்.

**அழைத்தலில்...**

குடும்பத்தில், குழந்தை பிறப்பில் ஒரு புதிய ஆளின் மறைபொருளைக் கடவுள் நம்மிடம் ஒப்படைக்கின்றார் (நம்பிக்கையின் ஒளி, 32). கடவுளின் வழியாகப் பெறப்பட்ட அன்புப் பரிசுகளான பிள்ளைகளை பேணிக்காப்பது பெற்றோரின் தலையான பணியாகும். பெற்றோராக இருப்பது ஒரு தொழில் அல்ல. அது இறைவன் அளித்த ஒரு அழைப்பு என்று மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். தங்கள் பிள்ளைகளின் வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாக கவனித்துப் பணிவிடை புரிந்து தெய்வீகத் தன்மையில் நாளும் வளரத் துணை புரிந்தவர்கள். மனிதனாக இம்மண்ணில் சிறந்து வாழ பலவற்றைக் கற்றுத் தந்தவர்கள். பிள்ளைகள் இன்று அனுபவிக்கும் பணமும் படிப்பும் பட்டமும் பதவியும் ஆற்றல்களும் திறமைகளும் முற்றிலும் தம் சுய முயற்சியால் பெற்றவை அல்ல. மாறாக பெற்றோரின் தியாகத்தால், கடவுளின் கொடையாகக் கிடைக்கப்பெற்றவை.

**பெற்றேராக இருப்பது உருவாக்கலில்...**

இன்றைய நுகர்வோர் கலாச்சாரம் தேவைக்கு மீறிய ஆசைகளை வளர்க்கிறது. பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாக இருக்கும் நேரம் குறைந்து, உறவுகளில் இடைவெளி அதிகரித்துள்ளது. தேவை என்பதைக் கடந்து ஆசையின் அளவு அதிகரித்துள்ளது. எழுதப்படாத வெள்ளைக்காகிதமாகப் பிறக்கும் பிள்ளைகளின் மனதில் பெற்றோரின் எண்ணங்களை, ஏக்கங்களைத் திணிப்பதும், நான் பட்ட வலி என் பிள்ளைகள் பெறக்கூடாது என்று பிள்ளைகள் கேட்பதற்கு முன்னதே எல்லாவற்றையும் கொடுத்துத் தங்கள் பிள்ளைகளைச் சோம்பேறிகளாக மாற்றும் டிஜிற்றல் பெற்றோர்களும் இவ்வுலகில் இல்லாமல் இல்லை. குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் செய்து கொடுப்பதைவிட வாழ்க்கையை எதிர்கொள்ளும் துணிவையும் பொறுப்புணர்வையும் கற்றுக்கொடுங்கள் என்று மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் பெற்றோருக்கு அறிவுரை புகட்டுகின்றார். இன்றைய பிள்ளைகளுக்கு தேவை தன்னம்பிக்கை, தன்முனைப்பு, சுயகட்டுபாடு, அரசியல் விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு. இவற்றை கற்றுக்கொடுப்பதும் கற்றலுக்கான தளங்களை அறிமுகப்படுத்துவதும் பெற்றோரின் கட்டாயக் கடமையாகும்.

மேலும், பிள்ளைகளோடு ஜாலியாகச் சிரித்து பேசினால், தங்களை மதிக்கமாட்டார்கள், பயம் இல்லாமல் போய்விடும் எனும் ஒருவித அச்ச உணர்வினால் தங்கள் பிள்ளைகளிடம் நெருக்கமான அன்பைக் காட்டத் தயங்குகின்றனர். ஒரு குழந்தை வளர்வதற்கு உணவு மட்டும் போதாது, அன்பு, அரவணைப்பு, ஊக்கம் மற்றும் பெற்றோரின் உடனிருப்பு அவசியம் என்று மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்துகிறார். பிள்ளைகளை அரவணைப்பது, முத்தமிடுவது, பாராட்டுவது, தட்டிக்கொடுப்பது, விளையாடுவது, உடனிருப்பது, வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வுப் பூர்வமான செயல்கள் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வலுசேர்த்துத் தன்முனைப்போடு பயணிக்கத் தூண்டும்.

**இறைநம்பிக்கையில்...**

குடும்பங்கள் கூடிச் செபித்து, இறைவார்த்தை பகிர்ந்து, செபமாலை செய்து, உரையாடி, உணவருந்திய காலம் மலையேறி, வாரத்திற்கு ஒரு நாள் மட்டும் விடுமுறை. ஆகவே நன்றாக தூங்க வேண்டும், வீட்டைச் சுத்தப்படுத்த வேண்டும், கடைக்குச் செல்ல வேண்டும், விளையாட வேண்டும், நண்பர்களைச் சந்திக்க வேண்டும், ஊர் சுற்ற வேண்டும் என்ற உணர்வு பெற்றோர்களிடமும் பிள்ளைகளிடமும் அதிகரித்துள்ளது. மேலும், வழிபாடுகளில் பங்கேற்பது, திருஅவைப் பணிகளில் ஈடுபடுவது, சமூக மாற்றுப் பணிகளுக்காக உழைப்பது போன்ற நற்செயல்கள் குறைந்து வருவது நம் சமூகம் எதை நோக்கி பயணிக்கின்றது என்ற கவலையைத் தருகின்றது.

ஒவ்வோர் குடும்பமும் இல்லத் திருஅவையாகத் தினமும் வாழத் தேவையான ஆற்றலையும் தூண்டுதலையும் மணத் துணைவர்களுக்குக் குடும்ப செபமும் நற்கருணைக் கொண்டாட்டமும் வழங்குகிறது (அன்பின் மகிழ்ச்சி, 318).

இறை நம்பிக்கை வளர்ப்பிலும், ஆரோக்கியமான உறவுகளை மேம்படுத்துவதிலும், நலமான சமூகம் உருவாக்கலிலும் பெற்றோரின் பங்களிப்பு அளப்பெரியது. ஆகவே, இறைவனில் நிலைத்து, கத்தோலிக்கக் கோட்பாட்டில் உறுதிப்பட்டு நமக்கு கிடைக்கப்பெற்ற இந்த அற்புதமான வாழ்வை இறை ஆசியோடு மகிழ்வாக அனுபவித்து, பிள்ளைகளும் அனுபவிக்கக் கற்றுக்கொடுப்பது இன்றிமையாதது.

**சுற்றுச்சூழலில்...**

படைப்பனைத்தையும் நல்லதெனக் கண்ட தந்தையாம் கடவுளின் பார்வையில் கதிரவனையும், நிலவையும், படைப்பனைத்தையும் உடன்பிறப்புகளாகக் கண்டு நேசித்தவர் புனித பிரான்சிஸ் அசிசி. இயற்கையை நேசித்து இணைந்து வாழவும், பயணிக்கவும், நிலைத்த வளர்ச்சிக்காய் உழைக்கவும் வழிகாட்டுகிறார். இந்தப் பூமி அனைவரின் பொது இல்லம் என்றும், இப்பூமியையும் இயற்கையையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை என்றும் நம் மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் "**புகழனைத்தும் உமக்கே!**" திருமுகம் வழியாக அறிவுறுத்துகிறார்.

மனிதர்கள் தன்னலத்துடனும் மிகக் கடுமையாகவும் இயற்கையைப் பாழ்படுத்தித் தங்கள் இலாப வெறியாலும், பேராசையாலும், இப்பூமியின் வளங்களைச் சுரண்டியும், இயற்கையை மாசுபடுத்தியும், அழித்து வருகின்றனர். இதனால் காலநிலை மாற்றம் ஏற்பட்டு, பல பேரிடர்களை நாம் சந்தித்து, பல உறவுகளையும் இயற்கை சூழமைவையும் இழந்துள்ளோம். இந்நிலை தொடராமல் விவேகத்துடன் நடந்து கொள்வது நமது முதன்மையாகும். இல்லங்களில் நடைபெறும் பிறந்த நாள், திருமண நாள், யூபிலி எனச் சிறப்பு கொண்டாட்டங்களில் மரக்கன்று நடும் திட்டத்தை அமுல்படுத்தி, இயற்கைகையை உருவாக்க வைக்கலாம். நம் இல்லங்ளைச் சுற்றிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் தடை செய்து, பசுமை இல்லமாக நம் இல்லத்தை மாற்றியமைக்கலாம்.

**நிறைவாக...**

முதன்மைப் பெற்றோர்களான புனித யோசேப்பு அன்னை மரியா ஆகியோரை நினைவுகூர்வது அவசியமாகிறது. மகனின் தேவைகளை அறிந்து, உணர்ச்சிகளைப் புரிந்து, இன்ப துன்பங்களில் பங்கேற்று, முயற்சிகள் தளர்ச்சிகள், வெற்றி தோல்விகளில் உடனிருந்து ஊக்கமளித்தவர்கள். தன் மகனைக் கோவில் அறிஞர்களே மலைத்துப்போகும் அளவுக்கு ஞானம் உள்ளவராக வளர்த்தார்கள். சுதந்திரமாகச் சிந்திக்கவும், கேள்விகளைக் கேட்கவும், தக்க பதில்கள் தரவும், தேவையான துணிச்சலையும், அறிவையும் அவருக்கு ஊட்டினார்கள். காணாமல் போன மகனை மூன்றுநாள் தேடி அலைந்து கண்டபோது, அலைச்சலுக்கும் அங்கலாய்ப்புக்கும் ஆளாக்கிவிட்ட தம் மகனிடம் ஆத்திரம் கொள்ளாது, மகனே ஏன் இப்படிச் செய்தாய் என நிதானமாக விசாரித்து, அவர் கூறும் விளக்கத்தையும் பொறுமையுடன்க் கேட்டு கனிவு கலந்த கண்டிப்புடன் அவரை வீட்டிற்கு அழைத்து வந்து, பணிந்து நடக்கச் செய்தார்கள். மேலும், இயற்கையோடு இணைந்து வாழவும் இயற்கையை நேசிப்பதற்கும் தூண்டுதலைத் தந்தார்கள் (மத். 6:26). அனைத்திற்கும் மேலாக இறையாட்சி எனும் இலட்சிய உணர்வை அவர் இதயத்திலே விதைத்து, பணியைத் தொடங்க அவரைத் தூண்டினார்கள்.

இவர்களின் பொறுப்புணர்வு நலமான இறையாட்சிக்கு வித்திட்டது. இப்பெற்றோரின் முன்மாதிரியைப் பின்பற்றிப் பொறுப்புமிக்க பெற்றோராகத் திகழ்வோம்.



# இயற்கையின் பாதையில் நுரையீரல் ஆரோக்கியம்...

**Dr. D.Brindha,** BNYS, M.S. G.M.
Yoga Naturopathy Clinic, Thiruvattar.

நுரையீரல் உடலின் மார்பு எலும்புக் கூட்டினுள் அமைந்துள்ள சுவாச மண்டலத்தின் முதன்மை உறுப்பு. இது உடலில் உள்ள கார்பன் டை ஆக்சைடை வெளியேற்றி ஆக்சிஜனை ரத்தத்தில் செலுத்துகின்றது.

மாறிவரும் பருவநிலை மாறுதல்களும், காற்று மாசுபாடும் புகை, வாகனப் புகை, தொழிற்சாலைப் புகை, தனிமனித புகைப் பழக்கம் போன்றவை நுரையீரல் ஆரோக்கியத்திற்கு பெரும் சுமையாக அமைகின்றன. நுரையீரலில் ஏற்படும் நோய்களில் புற்றுநோய் என்பது பெரும் நோய்ச் சுமையாகவே அமைகின்றது. ஆகஸ்ட் 1 உலக நுரையீரல் புற்றுநோய் தினம் அனுசரிக்கப் படுகின்ற இத்தருணத்தில், நுரையீரலின் ஆரோக்கியத்தை இயற்கையின் வழியில் மேம்படுத்துவது, பாதுகாப்பது சிறப்பான ஒன்றாக அமைகின்றது.



**நுரையீரல் புற்றுநோய்**

நுரையீரல் புற்றுநோய் என்பது நுரையீரலில் உள்ள செல்களின் கட்டுப்பாடற்ற அசாதாரணமான வளர்ச்சியின் விளைவாகும். இது புகைப்பிடித்தல், காற்று மாசுபாடு, மரபணு மாற்றம் போன்ற காரணங்களால் வருகின்றது. செல்களின் வளர்ச்சி, அமைந்துள்ள இடம், செல்லின் தன்மையைக் கொண்டு அறிகுறிகள் மற்றும் பாதிப்புகள் காணப்படுகின்றன.

**முக்கிய அறிகுறிகள்**

- மூன்று வாரங்களுக்கு மேல் தொடரும் இருமல்
- இருமலுடன் சளியில் ரத்தம்
- விவரிக்க முடியாத எடை இழப்பு
- மூச்சுத் திணறல்
- மார்பு வலி
- குரலில் ஏற்படும் மாற்றம்
- நாள்பட்ட மேல் முதுகு வலி
- காய்ச்சல்
- குணமாகாத மார்புத் தொற்று
- அடிக்கடி ஏற்படும் நிமோனியா / மூச்சுக்குழாய் அழற்சி

**வருமுன் தடுக்கும் முறைகள்**

- பீடி, சிகரெட் புகைப்பிடிப்பதை முற்றிலும் தவிர்த்தல்
- புகைப்பிடிப்பவரின் அருகில் செல்வதைத் தவிர்த்தல்

**நவீன சிகிட்ச்சை முறைகள்**

- அறுவை சிகிட்சை

- கீமோதெரபி
- கதிர்வீச்சு சிகிட்சை

**இயற்கை முறை நுரையீரல் ஆரோக்கியம் பேணும் வழிமுறைகள்**

1. ஆரோக்கியமான உணவுகள்
2. யோகா முறை மூச்சுப் பயிற்சிகள்
3. கிரியா (jala neti) மூக்குக் குவளை முறைகள்

**i) உணவுகள்**

நுரையீரல் ஆரோக்கியத்திற்கு உணவின் பங்கு மிகவும் முக்கியமாக எண்ணப்படுகிறது. குறிப்பாக anthayanins, proanthocyanidins, quercetin, resveratrol, lycopene, catechins, curcumin போன்ற ஆண்டி ஆக்சிஜன்ட்களை உள்ளடக்கிய உணவுப் பொருட்களை எடுத்துக் கொள்ளும்போது நுரையீரல் செல்களில் அலர்ஜி (inflammation) குறைந்து செல்களில் உள்ள oxidative stress கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் அதன் காற்றோட்டம் அதிகமாகிறது.

உதாரணமான உணவுகள்: திராட்சை, ஆப்பிள், பெரிகள், வெங்காயம், மஞ்சள், தக்காளி, தர்பூசணி, நிறம் உள்ள பழங்கள், காய்கள் முதலானவை ஆகும்.

**ii) யோகா மூச்சுப் பயிற்சிகள்**

தினமும் 10 முதல் 15 நிமிடம் மூச்சுப் பயிற்சி செய்வதன் மூலம் நம் நுரையீரலின் கொள்ளளவு அதிகரிக்கிறது. நுரையீரல் செல்களின் நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் உயிர் ஆற்றல் வெகுவாக உயர்கின்றது.

**iii) கிரியா முறைகள்**

இவ்வகை இயற்கை மற்றும் யோகா பயிற்சிகள் கழிவு செல்களை சுவாச மண்டலத்திலிருந்து நீக்குகின்றது. செல்கள் புதுப்பிக்கப்படுவதுடன் ஆரோக்கியத்தைப் பேணுகின்றது.

மாறிவரும் நாகரிக உலகில் உள்ள நேர் மற்றும் எதிர்மறைப் பாதிப்புகளை உணர்ந்தவர்களாய் ஆரோக்கியத்தின் பாதையில் நடந்திட நுரையீரல் புற்றுநோய் சுமையில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இயற்கையின் வழியில் வாழ்வோம். ஆரோக்கியத்தைப் பேணுவோம்.

அடுத்த இதழ் " **தரணி வாழட்டும் தாய்மை மகிழட்டும்** " என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. நமது "**புதிய தேடல்**" இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்பத் தங்கள் கவிதை, கட்டுரை, கதை, துணுக்குகள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-08-2026**-ம் தேதிக்குமுன், புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.



# மார்த்தா, மரியா, இலாசர்

எம். ஏ. எம்மா, சே.ச.

மார்த்தா, மரியா, இலாசர் என்ற உடன்பிறப்புக்கள் மூன்று பேருக்கும் ஒரே நாளில் திருவிழா கொண்டாடுவது ஒரு புதிய அம்சம். திருத்தந்தை பிரான்சிஸ் 2021-ம் வருடம் மார்த்தா, மரியா, இலாசர் - இவர்கள் மூன்று பேருடைய திருவிழாவையும் ஜுலை 29-ந் தேதி கொண்டாட வேண்டும் என்று அறிக்கை விடுத்தார். அதற்கு முன்பாக, புனித மார்த்தாவுக்காக மட்டும் அந்த நாளில் விழா எடுத்தோம்.

இறந்த இலாசர் மீதும். அவருடைய பிரிவினால் துன்புற்ற சகோதரிகள் மார்த்தா மரியாவின் மீதும் இயேசுவுக்கு ஒரு தனிப்பிரியம் இருந்த உண்மையை, விவிலியம் சொல்லாமல் சொல்கிறது. இவர்களுக்காக இயேசு தன்னுடைய பயணத்தையும் போதிக்கின்ற பணியையும் நிறுத்திவிட்டு பெத்தானியாவுக்கு வந்தது நம் மனதைத் தொடுகிறது. இந்த ஊரில் இயேசு இலாசரை உயிர்ப்பித்த அரிய புதுமையும் அதன்மூலம் வெளிப்படுத்திய வல்லமையும் இறைத் தந்தைக்கு அளித்த மகிமையும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. மயக்கம் போட்டவரையும் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பவரையும் எழுப்பிவிடலாம், ஆனால், இறந்தவரை எழுப்புவது மனிதச் சக்திக்கு அப்பாற்பட்டது என்று நம்பிக்கொண்டிருந்த அந்தக் காலத்து மக்கள் ஓர் அச்சம் கலந்த வியப்பில் மூழ்கியிருக்க வேண்டும். இறை வல்லமையைக் கொண்ட ஓர் இறைவாக்கினர் தங்கள் மத்தியில் வந்திருக்கிறார், தங்களுடைய ஊரில் உள்ள ஒரு குடும்பத்துக்காக இந்தப் புதுமையைச் செய்திருக்கிறார் என்று நினைத்து மார்த்தா மரியா மீது ஒரு தனி மரியாதையையும் பொறாமையையும் அந்த மக்கள் வளர்த்திருக்கலாம். மற்றவர்களுடைய எண்ணங்களும் உணர்வுகளும் எதுவாக இருந்தாலும், இயேசுவினுடைய உறவால், இது ஒரு பாக்கியம் பெற்ற குடும்பம். மூவரும் புனிதர்கள் என்று திருஅவை கொண்டாடுவதன் மூலம், அவர்கள் நமக்கு எடுத்துக்காட்டுகளாக, நமக்காகப் பரிந்து பேசுகின்றவர்களாக உறுதுணையாக இருக்கிறார்கள் என்று நம்புகிறோம்.

இயேசு இவர்களுடைய வீட்டில் உணவருந்தச் சென்றபோதும் இலாசரை உயிர்ப்பிக்கச் சென்றபோதும் இவர்கள் தங்கள் பேச்சிலும் செயலிலும் வெளிப்படுத்தியதை ஆய்வு செய்து, இவர்களுடைய ஆளுமைப் பண்புக்கூறுகளைக் கண்டுபிடிக்கலாம். வழக்கமாக, மார்த்தாவை பணி வாழ்வுக்கும், மரியாவை ஜெப வாழ்வுக்கும் எடுத்துக்காட்டாகச் சொல்வார்கள். "**என் கடன் பணி செய்து கிடப்பதே!**" என்பது மார்த்தாவினுடைய விருதுவாக்காகவும், "**என் வாழ்நாள் முழுவதும் இயேசுவின் காலடியில் அமர்ந்து அவர் பேச்சில் லயிப்பதே**" என்பது மரியாவினுடைய விருதுவாக்காகவும் சொல்வதுண்டு. இயேசுவும் அவருடைய சீடர்களும் பயணக் களைப்பு நீங்கிப் புத்துணர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக விருந்து படைக்க வேண்டும் என்று மெனக்கிடுகிறவர் மார்த்தா. வீட்டு வேலைகளில் ஆழ்ந்துவிட்டால், இயேசு தனியாக அமர்ந்திருப்பார், யாராவது அவருக்குத் துணையாக அருகில் அமர்ந்து பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று அக்கறையில் இருப்பவர் மரியா. ஒரே குடும்பத்தில் சகோதரிகளாக வளர்ந்தவர்கள் தான் இவர்கள். எனினும், அவர்களின் குணநலன்கள் வேறுபட்டு இருந்திருக்கின்றன. அவர்களுடைய சிந்தனையும் உணர்வுகளும், நம்பிக்கைகளும், செயல்களும் வித்தியாசமாக இருந்திருக்கின்றன!

உளவியலில், ஆளுமைப் பண்புகளை ஐந்து வகைகளாகப் பிரிப்பார்கள். அவை:

**திறந்த மனப்பான்மை** (Openness to Experience) : பொறுப்புணர்வு மனசாட்சியின்படி செயல்படும் தன்மை (Conscientiousness); இணக்கத்தன்மை (Agreeableness) – பிறரிடம் அன்பாகப் பழகுவதோடு பிறருக்கு உதவும் குணம்; அதிக உணர்ச்சிவசப்படக்கூடிய தன்மை (Neuroticism) – பயம், சோகம், கவலை போன்ற எதிர்மறை உணர்வுகளை அதிகமாக உணர்வதோடு மன அழுத்தத்திற்கு ஆளாகும் குணம். ஐந்தாவதாக, புறமுக நோக்கு. அதாவது,

**புறமுக நோக்கு** (Extrovesion) – புதிய மனிதர்களுடன் எளிதாகப் பழகும் தன்மை, சமூகக் கூட்டங்களை விரும்பும் தன்மை, தங்களுடைய எண்ணங்களை வெளிப்படையாகப் பேசும் திறமை. இதற்கு மாறாக, உள்முக நோக்காளர்கள் கூட்டத்தை விரும்பாமல் தனிமையை நாடுவார்கள். சமூகத்துடன் பழகினால் இவர்களுக்கு ஆற்றல் குறைந்துவிடும். அவர்களின் சோர்வைப் போக்கித் திரும்பவும் ஆற்றல் பெறுவதற்கு, இவர்கள் தனிமையைத் தேடுவார்கள். தனக்குத் தெரிந்த ஒரு சிறிய கூட்டத்தில் நெருங்கிப் பழகுவார்கள். பிறர் பேசுவதைக் கூர்ந்து கவனிப்பார்கள். எதையும் ஆழ்ந்து சிந்திப்பார்கள்,

ஆளுமைப் பண்புகளில் ஒன்றான புறமுக நோக்கு அடிப்படையில் ஆய்வு செய்தால், மார்த்தா புறமுக நோக்காளராகத் தோன்றுகிறார். மார்த்தா தன்னுடைய ஆதங்கத்தையும் தேவைகளையும் மட்டுமல்ல, உயிர்ப்பின்மீது தான் கொண்டிருந்த நம்பிக்கையையும் துணிந்து இயேசுவிடம் சொல்கிறார். உபசரிப்புக்குத் தேவையான அனைத்தையும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே, பதட்டமும், பரபரப்பும் அவரைப் பற்றிக்கொள்கின்றன, தன்னோடு சேர்ந்து வேலை செய்யாமல் தன்னுடைய தங்கை இயேசுவின் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே என்று புகார் சொல்கிறார். மனதிலிருப்பதை மறைக்காமல் குறைக்காமல் பொரிந்து தள்ளுகிறார். இயேசு வருகிறார் என்று தெரிந்தவுடனே, வீட்டைவிட்டு வெளியே கிளம்பி இயேசுவைச் சந்திக்கப் போகிறார், அவரின் வரவுக்காகக் காத்திருக்கிறார், மனதிலிருந்த வருத்தத்தைக் கொட்டுகிறார். பல காரியங்களைச் சிறப்பாகச் சரியான நேரத்தில் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்தோடு செயல்படுகிறவருக்கு மன அழுத்தம் வரத்தானே செய்யும்!?

மரியா, மார்த்தாவுக்கு நேர்மாறானவர். உள்முக நோக்காளர். பதட்டப்படாமல் அமைதியாக இருந்து சிந்திக்கக்கூடியவர். இயேசுவின் காலடியில் இருந்து ஆர்வத்துடன் கேட்கக்கூடியவர். இயேசுவின் ஆளுமையைப் பார்த்து, அவருடைய வார்த்தையைக் கேட்டு, அவரின் பயணத்தையும் குறிக்கோளையும், அவருடைய சிந்தனை ஆழத்தையும் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தவர். பிறர் என்ன நினைப்பார்கள் என்றோ, பணத்தைப் பற்றியோ கவலைப்படாமல் விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை "**விரயம்**" செய்தவர். ஒரு பெண்ணால் எந்த அளவுக்கு இயேசுவின்மீது கொண்டிருந்த பற்றை வெளிப்படுத்த முடியுமோ, அதிலே இவருக்கு நிகர் வேறு யாரும் கிடையாது.

உள்முகச் சிந்தனை கொண்ட மரியாவின் அன்பு, ஆரவாரமில்லாத, அமைதியான அன்பு, ஆனால் ஆழமான அன்பு,

மார்த்தா போன்ற புறமுகச் சிந்தனை உள்ளவர்களும் மரியா போன்ற உள்முகச் சிந்தனை உள்ளவர்களும் அன்பையும் தங்களுடைய உணர்வுகளையும் எப்படியாவது வெளிப்படுத்துவார்கள். இரண்டு விதங்களும் வேறுபட்டிருந்தாலும், இரசிக்கக்கூடியவையே! தேவையானவையே! இவர்களின் அன்பை உணரத் தெரிந்தவர்கள் அதன் ஆழத்தைப் புரிந்துகொள்வார்கள். இவர்களுடைய அன்பு இயேசுவுக்கு இதமாக, ஆறுதலாக இருந்திருக்க வேண்டும். கூடப்பிறந்த இலாசரும் இவர்களுடைய அன்பினால் வலிமையும் வளர்ச்சியும் அடைந்திருப்பார். இந்த மூன்று பேரும் இயேசுவின் சீடர்கள்தாம். மூன்று பேருமே இயேசு என்ற "**நன்மை**"யைத் தேர்ந்து கொண்டவர்கள். இயேசுவுக்கு நெருக்கமாக இருந்த இந்த மூவரும் பேறுபெற்றவர்களே! நம்முடைய ஆளுமைப் பண்புகள் எதுவாக இருந்தாலும் இந்த மூவரில் யாராவது ஒருவரைப் பின்பற்றலாமே!

# பணிக்குழுக்களின் சிறப்புச் செயல்பாட்டு அறிக்கைகள்
## குழித்துறை மறைமாவட்டம்

### பணிக்குழுக்களின் ஒருங்கிணையம்

- 16.06.2026 அன்று பணிக்குழுக்களின் ஒருங்கிணைய மையக்குழு சார்பாகக் கிறிஸ்தவ வாழ்வு மற்றும் அன்பியப் பணிக்குழுக்கள் சந்திக்கப்பட்டன. பணிகள் பற்றிய திறனாய்வும் தொடர் திட்டமிடலும் நடைபெற்றன.

### கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு

*மறைக்கல்விப் பணிக்குழு*

- பள்ளி மறைக்கல்வி நன்னெறி தொடர்பாளர் பயிற்சி 24.06.2026 டிரினிட்டி மேய்ப்புப் பணி மையம் பயிற்சி அரங்கம், உண்ணாமலைக்கடையில் நடைபெற்றது. நம்பிக்கையும் நற்பண்பும் நிறைந்த தலைமுறையை உருவாக்குவதில் மறைக்கல்வி நன்னெறி ஆசிரியர்களின் பொறுப்பு என்ற தலைப்பில் நடைபெற்றது. 84 பேர் பங்கேற்றனர்.
- புனித பிரான்சிஸ் அசிசி அவர்களின் வழியில் நம் பிள்ளைகளும், இயற்கை நேயத்தோடு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் ஒவ்வொரு மாணவரும் குறைந்தபட்சம் ஒரு மரக்கன்றையாவது நட்டு வளர்க்க வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கில் உலகச் சுற்றுச்சூழல் தினம் ஜுன் 5-ஐ முன்னிட்டு 28.06.2026 அன்று மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்கு மற்றும் கிளைப் பங்கிலுள்ள மறைக்கல்வி மன்றத்திலுள்ள அனைத்து மாணவர்களும் ஆலயத்திற்கு வரும்போது ஒரு மரக்கன்று கொண்டு வரவும், அதைத் தங்கள் இல்லத்திற்குக் கொண்டு போய் நட்டுப் பராமரிக்கவும் வழிகாட்டப்பட்டது.
- ஆறு மறைவட்டங்களிலும் பாடத்திட்டச் சிறப்புப் பயிற்சி நடைபெற்றது. 2253 மறையாசிரியர்கள் பங்கேற்றார்கள்.

*திருவழிபாடு பணிக்குழு*

- 13.06.2026 வேங்கோடு மறைவட்டப் பொதுக்குழு நடைபெற்றது. 30 பேர் பங்கேற்றனர். புனித அசிசியாரும் இயற்கைநேயமும் என்ற தலைப்பில் கருத்துரை நடைபெற்றது.

### 2. சிறார் பணிக்குழு

- 26.06.2026 திரித்துவபுரம் மறைவட்டம் சார்பாக மேல்புறம் மண்டல அளவில் பயிற்சி கபிரியேல் அதிதூதர் ஆலய அரங்கம், திக்குறிச்சியில் வைத்து "**உதவும் கரங்கள் நம்பிக்கையின் இதயங்கள்**" என்னும் தலைப்பில் நடைபெற்றது. 268 பேர் பங்கேற்றனர்.
- 01.06.2026 மறைமாவட்ட கருத்தாளர் பயிற்சி டிரினிட்டி மேய்ப்புப் பணிப் பயிற்சி அரங்கில் வைத்து "**உதவும் கரங்கள் நம்பிக்கையின் இதயங்கள்**" என்னும் தலைப்பில் நடைபெற்றது. 30 பேர் பங்கேற்றனர்.
- 27.06.2026 மறைமாவட்ட வழிகாட்டிகள் பயிற்சி புனித அந்தோணியார் அரங்கம் வெட்டுவெந்தியில் "**உதவும் கரங்கள் நம்பிக்கையின் இதயங்கள்**" என்னும் தலைப்பில் நடைபெற்றது. 137 பேர் பங்கேற்றனர்.
- 21.06.2026 மாத்திரவிளை மறைவட்டம் இயற்கை உணவு பற்றிச் சிறப்புப் பயிற்சி புனித தேவசகாயம் திருத்தலம் நட்டாலத்தில் நடைபெற்றது. 321 பேர் பங்கேற்றனர்.

## 3. இளைஞர் பணிக்குழு

### *இளைஞர் இயக்கம்*

**பொதுக்குழுக்கள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 19.06.2026 | முளகுமூடு | பனைமரம் | 38 |
| 14.06.2026 | திரித்துவபுரம் | பனை மரம் | 22 |
| 19.06.2026 | புத்தன்கடை | தொலைந்து போவதால் சாவிக்கு என்ன பயன் | 15 |
| 19.06.2026 | காரங்காடு | சுற்றுச்சூழல் | 5 |
| 21.06.2026 | மாத்திரவிளை | பிரான்சிஸ் அசிசியாரின் பணியும் வாழ்வும் | 27 |
| 14.06.2026 | வேங்கோடு | பனைமரம் | 35 |

**வழிகாட்டிகள் பயிற்சி**

- புத்தன்கடை வட்டார இளம் கிறிஸ்தவ மாணாக்கர் மற்றும் இளைஞர் இயக்க வழிகாட்டிகளுக்கான பயிற்சி புத்தன்கடை யாகப்பர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. 14 வழிகாட்டிகள் கலந்து கொண்டனர். "**இயக்க நோக்கத்தின் அடிப்படையில் இளைஞர்களை ஒருங்கிணைத்தல்**" என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

### *இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்*

**மறைவட்டப் பொதுக்குழு**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 07.06.2026 | முளகுமூடு | இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் | 28 |
| 21.06.2026 | திரித்துபுரம் | மந்திரமா தந்திரமா | 35 |
| 21.06.2026 | புத்தன்கடை | தொலைதூரப்பார்வை | 30 |
| 21.06.2026 | காரங்காடு | பனைமரம் | 43 |
| 21.06.2026 | மாத்திரவிளை | புன்னகை | 10 |
| 21.06.2026 | வேங்கோடு | பனைமரம் | 45 |

## 4. தொழிலாளர் பணிக்குழு

- 28.06.2026 அன்று மறைமாவட்ட பயிற்சி பரக்குன்று இயேசுவின் திருஇருதய ஆலயத்தில் வைத்து "**உளநலமும் வாழ்வு முறையும்**" என்ற சிந்தனையில் நடைபெற்றது. 35 பேர் பங்கேற்றனர்.

## 5. சமூகத்தொடர்பு பணிக்குழு

- மகத்தான மானுடம் திருத்தந்தை 14 ஆம் லியோ அவர்களின் சுற்றுமடல் குறித்த உரையாடல் மற்றும் அன்றாட அருள்வாக்கு, இறை ஒளியில் நிறைவாழ்வு, புனிதர் வரலாறு, தவக்காலச் சிந்தனைகள் பற்றிய Poster மற்றும் கத்தோலிக்கப் பாடல்கள் தயாரித்துத் தினமும் whatsapp குழுவில் மற்றும் Youtube Channel –ல் பகிரப்படுகின்றது.

## 6. பெண்கள் பணிக்குழு

**பொதுக்குழுக்கள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 03.06.2026 | புத்தன்கடை | புனித அசிசியார் வாழ்கிறார் | 20 |

| | | | |
|---|---|---|---|
| 10.06.2026 | திரித்துவபுரம் | புனித அசிசியார் வாழ்கிறார் | 30 |
| 17.06.2026 | வேங்கோடு | இயற்கையை நேசிப்போம் | 25 |
| 20.06.2026 | முளகுமூடு | இயற்கை கடவுளின் கொடை | 20 |
| 24.06.2026 | காரங்காடு | புனித அசிசியார் வாழ்கிறார் | 25 |
| 27.06.2026 | மாத்திரவிளை | புனித அசிசியார் வாழ்கிறார் | 38 |

## 7. குடும்பநலம் பணிக்குழு

- 28.06.2026 அன்று கருத்தாளர்களுக்குப் பயிற்சி டிரினிட்டி மேய்ப்புப் பணி மையத்தில் நடைபெற்றது. 27 கருத்தாளர்கள் பங்கேற்றனர்.
- திருமணத் தயாரிப்புப் பயிற்சியில் "**நெகிழி பயன்பாட்டைத் தவிர்த்து இயற்கையோடு இணைந்து வாழ்தல்**" பற்றிப் பயிற்சி வழங்கப்பட்டது.

## 8. சிறைப் பணிக்குழு

- 27.06.2026 அன்று பூவாறில், மறைமாவட்ட டிரினிட்டி மேய்ப்புப் பணி மையத்தில் நடைபெற்றது. 13 பேர் பங்கேற்றனர்.

## 9. அன்பியப் பணிக்குழு

- 13.06.2026 சிறப்பு கருத்தரங்கு தொலையாவட்டம் அன்னை வேளாங்கண்ணி கலைக்கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. அசிசியாருடைய வாழ்வும் சுற்றுப்புறப் பாதுகாப்பும், ஏழைகளில் இறைவனைக் கண்ட அசிசியார், அசிசியார் காட்டும் அமைதி வாழ்வு என்னும் சிந்தனைகளில் அமர்வுகள் நடைபெற்றன. சுமார் 430 நபர்கள் பங்கேற்றனர்.
- 28.6.2026 புத்தன்கடை மறைவட்ட அன்பிய மாநாடு, புத்தன்கடையில் நடைபெற்றது. சுமார் 600 பேர் பங்கேற்றனர்.

**பொதுக்குழுக்கள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 06.06.2026 | முளகுமூடு | போதை விழிப்புணர்வு | 50 |
| 27.06.2026 | மாத்திரவிளை | புனித அசிசியார் வாழ்கிறார் | 44 |
| 27.06.2026 | காரங்காடு | புனித அசிசியார் வாழ்கிறார் | 52 |
| 28.06.2026 | திரித்துவபுரம் | மூத்தோர் பராமரிப்பு | 66 |
| 28.06.2026 | வேங்கோடு | இயற்கையோடு இணைந்த வாழ்வு | 38 |

**நல உதவி**

- கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவச் செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ. 2,21,880.00/- வழங்கப்பட்டது

## 10. பட்டியலினத்தார் பணிக்குழு

- பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுவின் 2026 ம் கல்வி ஆண்டில் பன்னிரண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கப்பரிசு வழங்கும் நிகழ்வானது 20.06.2026 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அதிக மதிப்பெண் பெற்ற 10 மாணவர்களுக்கு ரூ. 32000/- ஊக்கப்பரிசு வழங்கப்பட்டது. நிகழ்வில் 27 பேர் கலந்து கொண்டனர்.
- பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் பணிக்குழுவின் கருத்தாளர்கள் குழுவிற்கு பயிற்சியானது 26.06.2026 அன்று ஆயர் இல்லம் உண்ணாமலைக்கடையில் வைத்து நடைபெற்றது. "**அமைப்பை வலுப்படுத்துதல்**" என்று தலைப்பில் பயிற்சி நடைபெற்றது. 16 பேர் கலந்து கொண்டனர்.

- தென்காசி மாவட்டம் நெட்டூர் பகுதியில் நடைபெற்ற சாதிவெறித் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களைப் பணிக்குழு செயலர் சந்தித்து ஆறுதல் கூறி ரூ.10000/- நிவாரணம் வழங்கினார்.

**11. நற்செய்திப் பணிக்குழு**

- திக்கணங்கோடு, வெட்டுவெந்தி, பாரதப்பள்ளி, சூழால், நட்டாலம் ஆகிய பங்குகளில் நற்செய்தி கொண்டாட்டம் மற்றும் இரவு விழிப்பு செபம் நடைபெற்றது.

**12. சுற்றுச்சூழல் இயக்கம்**

- ஜுன் 05, 2026 உலகச் சுற்றுச்சூழல் தினத்தை ஜுன் 07 பங்குகளில் கொண்டாட வழிபாட்டுக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது.
- சூழலியல் விழிப்புணர்வு Poster தயாரித்து சமூக ஊடகங்கள் வழி பரவலாக்கப்பட்டு வருகின்றது.

**11. உளநலம் பணிக்குழு**

- ஜுன் 15-ம் நாள் கோட்டாறு மறைமாவட்டம் புனித அந்தோனியார் தாதியர் கல்லூரியிலிருந்து 44 மாணவிகள் புதுவசந்தத்தில் வளாகச் சந்திப்பு நடத்திப் பங்கேற்பாளர்களோடு உரையாடி, கலைநிகழ்ச்சியும் நடத்தினர். கேரளத்தைச் சார்ந்த கல்லூரி மாணவி ஒருவர் 15 நாள் internship பயிற்சி பெற்றார்.
- ஜுன் 26, உலகப் போதைக்கெதிரான விழிப்புணர்வு தின நிகழ்வு நடைபெற்றது. ஜோதி ஓட்டம், பேரணி மற்றும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. போதையை விட்டு வாழ்வோருக்கு ஊக்கமடல்கள் கொடுக்கப்பட்டன. 400-க்கு மேல் மக்கள் கலந்துகொண்டனர்.

## ஜுலை மாத ஆயர் ஆலுவல்கள்

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 02 | Nuptial Mass | Kottar | 10.00 am |
| 03 | Opening of St Devasahayam Special School for Intellectually Disabled | Malaiyadi | 09.00 am |
| 4 – 10 | TNBC Meeting | Pillar | |
| 10 | Jubilee Mass | Dindigul | 05.00 pm |
| 11 | House Blessing, Altar Blessing | Murasancode | 06.00 pm |
| 13 -18 | CBCI Training Program | Yercadu | 10.00 am |
| 18 | Finance Committee meeting | Bishop’s House | 03.00 pm |
| 20 | Board meeting of Nanjil College | Kaliakkavilai | 04.00 pm |
| 21 | Curia | Bishop’s House | 09.30 am |
| 22 | Thanksgiving Mass | Patttarivilai | 06.00 pm |
| 24 | Holy Spirit Mass, AAC | Karumathur | 11.15am |
| 26 | DPC | Bishop’s House | 03.00 pm |
| 28 | Consult | Bishop’s House | 09.30 am |
| | House Blessing | Madathattuvilai | 05.00 pm |


100%
NATURAL
& HANDMADE
Be Naturea
Herbal
Hair Oil
Nature's Nourishment for
Stronger, Thicker, Healthier Hair
"Good Hair
is not just
a Beauty,
it's a
Reflection of
Good Health."
BENEFITS
Promotes
Hair Growth
Strengthens
Hair Roots
Reduces Hair Fall
& Breakage
Nourishes Scalp
& Prevents Dandruff
Adds Natural Shine
& Softness
100% Natural
& Chemical Free
Be Naturea
Herbal
Hair Oil
GOODNESS OF NATURE
Bhringraj
Hibiscus
Amla
Neem
Curry Leaves
Fenugreek
Coconut Oil
No Mineral Oil
No Silicones
No Parabens
No Artificial Fragrance
GM YOGA
NATUROPATHY CLINIC
GM YOGA
NATUROPATHY CLINIC
THIRUVATTAR
Heal Naturally • Live Healthy
9442711782
Thiruvattar,
Kanyakumari District,
Tamil Nadu - 629177
NOURISH YOUR HAIR NATURALLY, EVERY DAY

Date of Publishing : **20-07-2026**
Puthia Thedal Registered with Register of News Paper of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92 Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office - 629167.

# ST. MARY'S ARTICLES

## செயின்ட் மேரி ஆர்டிகல்ஸ்

கூனம்பனை, பளுகல் அஞ்சல்






எங்களிடம் திருப்பலிக்கு தேவையான பொருள்கள் திருப்பலி கிண்ணங்கள், கதிர் பாத்திரங்கள், நற்கருணை பேளைகள், சொரூபங்கள், ஜெபமாலைகள், விவிலியங்கள், அலங்கார விளக்குகள், மெழுகுதிரிகள், ஜெப புத்தங்கள், தூப கலசங்கள், திருப்பலி உடைகள் மேற்கூறிய அனைத்தும் இங்கே கிடைக்கும். மேலும் ஆர்டரின் பெயரிலும் செய்து தரப்படும்.






குறிப்பு: திருப்பலி உபகரணங்கள் பழுது பார்த்து தரப்படும்.

தொடர்பு எண் : 9495203524
8547337871

Edited & Published by **Rev. Fr. R. PAUL RICHARD JOSEPH** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at **THEDAL PRESS, AZHAGIYAMANDABAM**